# குயில் பாடல்கள்

## குயில்

மின்னும் கருமேனி விண்ணில் மிதப்ப, இரு
சின்னஞ் சிறுவிழியாம், செம்மணிகள் நாற்புறத்தும்
நோக்க, விரைந்து, கதிரும் நுழையாத
பூக்கமழும் சோலை புகுவது கண்டேன்;
கூக்கூ எனும் அக் குயிலின் குரல்கேட்டேன்;
ஆக்காத நல்லமுதோ! அடடாநான் என்சொல்வேன்!
விட்டு விட் டொளிக்குமொரு மின்வெட்டுப் போல்நறவின்
சொட்டொன்றொன் றாகச் சுவையேறிற் றென்காதில்.

கருநெய்தற் காட்டரும்பு போலும் குவிந்த
இரண்டலகு தம்மிற் பிரிந்து குரல்எடுக்க
வாயிற்செவ் வல்லி மலர்கண்டு நான் வியந்தேன்!

ஓயாது சுற்றுமுற்றும் பார்க்கும் ஒளிக்குயில்நான்
இவ்வுலகம் இன்னல் நிறைந்ததென எண்ணிற்றா?
எவ்வலியும் தன்னிடத்தே இல்லை என அஞ்சிற்றா?

மாவின் கிளையை மணிக்காலால் தான்பற்றிப்
பாவின் இனிமைதனைப் பாரோர்க்குப் பாச்சுகின்ற
நேரத்தில், தன்விழியின் நேரிலுள்ள மாந்தளிரை,
ஆர அருந்தத் தொடங்கும் அவாவோடு.

பொன்னாய்ப் பொலியும் தளிரும், புதுமெருகில்
மின்னாய் மிளிர்கின்ற மென்தளிரும், பிள்ளைகளின்
மேனி எனப்பொலியும், மிக்கொளிசெய் நற்றளிரும்
ஆன கிளிச்சிறகின் ஆர்ந்த பசுந்தளிரும்,
கொத்தாய் இருக்கும், குயிலலகுச் சாமணத்தை
வைத்தெடுத் துண்ணும்; பின் தத்திப் பிறிதொருபால்
வேறு தளிர் பார்க்கும்; இடையிடையே, மேல்கரும்பின்
சாறுநிகர் பாடல் தரும், தன் இறகடித்து
மற்று மொருகிளைக்கு மாறும், மறுநொடியில்
முற்றிலும் அஞ்சும், மகிழும் முடிவினிலே,
செய்மையிலோர் சோலைக்குச் செல்லும் குயிலினிடம்
தூய்மை மிகுபண்பொன்று கேட்பீர்; சுவையைப்
படியளக்கும் வையத்தார் உண்ணும் படியே
குடியிருப்பொன் றில்லாக் குயில்!

## நமது குயில்

செந்தமிழ் நாடு சிறப்புறுதல் வேண்டுமெனில்
நந்தமிழை நாம்மீட்க வேண்டுமன்றோ?—முந்தாத
நெஞ்சும், விழியும், நிலைகண் டெழும்வண்ணம்
கொஞ்சும் நமது குயில்.

அண்டை மொழிகள் சலுகைபெற, ஆலிநிகர்
பண்டைத் தமிழ் வருந்தப் பார்ப்போமா?—அண்டுமலர்க்
காவும், தமிழர் கருத்தும், களிதுள்ளக்
கூவும் நமது குயில்.

அயலான்நம் செந்தமிழை ஆளுவது நீங்க
முயலா திருத்தல் முறையோ?—மயல்நீக்கி,
ஊட்டும் உணர்வூட்டி, ஒன்றாய்த் தமிழர்களைக்
கூட்டும் நமது குயில்.

வடமொழியால் செந்தமிழை மாற்றும்கொடுமை
படமுடியாதன்றோ இப் பாரில்!—கொடியார்க்கு,
மொட்டு மலர்ந்ததென முத்தமிழ்ச்சீர் வாய்திறந்து
கொட்டும் நமது குயில்.

ஆண் என்ப, பெண் என்ப, அந்தமிழ்ச்சீர் ஆயாதார்,
நாண் என்ப தின்றி நடப்பதுவோ?—வீணாள்
கழிக்கும் தமிழரின் காதில், தமிழ்ச்சீர்
கொழிக்கும் நமது குயில்.

நிலைச்சொல் தமிழருறு நீள்தமிழ் நாட்டில்
கலைச்சொல் வடமொழியிற் காண—அலைச்சல் ஏன்?
நோக்கும் அறிவிழந்த மக்களிடை, நுண்ணறிவைக்
கோக்கும் நமது குயில்.

ஆண்ட தமிழர் அடிமைபெற, வேற்றுவர்கள்
பூண்டபெருஞ் சூழ்ச்சி பொறுப்பதுண்டோ?—துண்டா
தவிக்கும் அவர்க்கே, அறம்பாடிப் பாடிக்
குவிக்கும் நமது குயில்.

இந்தியினைக் கட்டாயம்ஆக்கி, இனிதான
செந்தமிழை ஈடழித்தாற் சீறோமோ?—இந்த
அடுக்கும் செயலிலர்க்கே ஆட்சிமுறை சொல்லிக்
கொடுக்கும் நமது குயில்.

மாட்சி தமக்குரித்து; வண்டமிழர் கூட்டமோ
காட்சிக்கே என்று கதைப்பதுண்டோ—ஆட்சி
பறிக்கும் உளத்தார்க்குப் பண்பிதுதான் என்று
குறிக்கும் நமது குயில்

செந்தமிழ்நாட் டாட்சிபெற்றுச் செம்மைத் திராவிடத்தில்
முந்தும் குறைகள் முடிக்கோமோ?—வந்து நமைச்
சீறும் பகைவர்க்குச் செந்தமிழர்க் கைத்திறத்தைக்
கூறும் நமது குயில்.

## தென்றலின் குறும்பு

இழுத்திழுத்து மூடுகின்றேன்
எடுத்தெடுத்துப் போடுகின்றாய்,
பழிக்க என்றன் மேலாடையைத் தென்றலே—உன்னைப்
பார்த்துவிட்டேன் இந்தச் சேதி ஒன்றிலே

சிலிர்க்கச் சிலிர்க்க வீசுகின்றாய்,
செந்தாழைமணம் பூசுகின்றாய்
குலுங்கி நடக்கும் போதிலே என் பாவாடை—தனைக்
குறுக்கில் நெடுக்கில் பறக்கச் செய்தாய் தென்றலே!

வந்து வந்து கன்னந் தொட்டாய்,
வள்ளைக் காதில் முத்தமிட்டாய்,
செந்தாமரை முகத்தினை ஏன் நாடினாய்?—ஏன்
சீவியதோர் கருங்குழலால் மூடினாய்?

மேலுக்குமேல் குளிரைச் செய்தாய்,
மிகமிகக் களியைச் செய்தாய்,
உள்ளுக்குள்ளே கையைவைத்தாய் தென்றலே—என்
உயிருக்குள்ளும் மகிழ்ச்சி வைத்தாய் தென்றலே!

## கோழிப் போர்

ஆர்த்தது கோழி போர்க்களத்தே!
அணுகுண்டெல்லாம் என் கணுக்காலின் கீழே,
அறந்தவறேன் போர் அறந்தவறேனென்றே. (ஆர்த்தது)

பாருக்கொரு வேந்தன்
தேருக்கொரு பாகன் தான்!

பார் என்றெதிர்த்த மற்றொரு கோழி
ஓரடி வாங்கி, மற் றோரடி தந்தது மார்பில். (ஆர்த்தது)

எற்றும் கோட்டு முட்கள்
ஈட்டிக்கோர் ஈட்டி—ஒன்று

சிறந்த கழுத்துக் கிழிந்தும் எதிர்த்தே
இறந்தது, தன்புகழ்க் கிலக்கியம் வைத்தே! (ஆர்த்தது)

## சேவற் போர்

போரிடுகின்றன! போரிடுகின்றன!
கார் நிறச் சேவலும் கதிர் நிறச் சேவலும்
போரிடுகின்றன, போரிடுகின்றன.

தலையைத் தாழ்த்தின; தம் கழுத்துச் சிறகு
சிலிர்த்தன; குறிபார்த்துச் சினவிழி எதிர்த்தன;
தெருவெலாம் செந்தூள் சிதறச் சிதறப்
போரிடுகின்றன ஓரிரு சேவலும்!

அடடே! அடடே! அராவிய இரும்பென,
எடுத்த முள் தூக்கி அடித்த காலை
ஊன்றுமுன் எதிரிகால் உயர்ந்தடித்தது!
குருதி நனையுடல் கருதாது புகையுயிர்
பருகுவதொன்றே கருதிச் சலியாது
போரிடுகின்றன பொன்விழிக் கோழிகள்.

கதிர் நிறச் சேவலா? கார்நிறச் சேவலா?
எது வெற்றி பெறும் என்றேன் நெஞ்சை!

அரசினர் சலுகை அடைந்தவர் வெல்வார்.
அஃதிலார் அஞ்சுவர் ஆதலால், தோற்பர்
என்றதென் நெஞ்சம். ஏஏ அரசியல்
ஒன்றுமில்லா உண்மை உலகத்து
மறப்போர்; இது எனல் மறந்தனை நெஞ்சே.

மேலும், அவ்வுலகில் ஏலும் அரசினர்
தம்செல்வாக்கை தம்மவர்க்காக்கி
வஞ்சம் புரிவதும் கொஞ்சமும் இல்லையே.
என்றேன்! ஆமாம் இவை மக்களல்ல
என்றது! போரிடுகின்றன சேவல்கள்.

பகையின் இறக்கைகள் புகுத்திய கழுத்தால்
எதிர்ப்புறம் தள்ளி இருகாற் படையை
உரத்திற் பாச்ச ஏங்கும் போதே
வலப்புலம் விலகி வரட்டும் அதன் பகை!

குறுநெஞ்ச மக்கள் கொண்ட போர்க்கிடையில்
பெருமையும் வசையும் பேசுவர் அன்றோ!
குரலினை மூச்சோடு கூட்டி, விரைவில்
சிறப்பதும் இறப்பதும் தெரிதல் வேண்டிப்
போரிடுகின்றன பொய்யிலாப் பறவைகள்!

குழைந்த செம்பரத்தைபோல் கொண்டை, செந்நீர்
பொழியவும், தாடி கிழியவும், இறக்கை

விரித்துக் குதித்து, மின்வெட்டுப் போலும்
தெருள்மெய்ப் புண்ணின் குருவி யருவிச்
சேற்றில் தங்கள் ஆற்றல் கொண்டமட்டும்
காற்றில் சிறகு சுழன்று பறக்கப்
போரிடுகின்றன!

அடடா! ஒன்றின் நெடிய கழுத்தில்
கொடியமுள் பாயக் குரல்வளை கிழிந்தது!
கதிர் விழுந்தது! கதிர் இறந்தது!
புதுப்புகழ் உலகு புக்கது! கார்நிறம்
நற்கழுத்து உயர்ந்து வளைத்தது
வெற்றி முரசொலி விளைத்த தாங்கே!

## கலை எது? கலைப்பொருள் எது?

சேற்றிலே தூரியம் செலுத்தி, அள்ளி
வீட்டுக் குறட்டில் விளையாட் டாகக்
கலைஞனாம் ஒருவன் கடிதொன்று வரைகையில்,
"அடடே, தூய்மை அழிந்ததே" என்றே
எரிச்சலோட அவனிடம் ஏக, அக்
குறட்டில் "குச்சு நாய் வாலைக் குரங்குபற்றி
இழுப்பதைக் கண்டேன், எழுதியோன் இழிசெயல்,
சேறு, தூரியம், சொறிந்த என் எரிச்சல்,
இவை அனைத்தும் என் நினைவில் இல்லை.

எது எனை இவற்றை மறக்கச் செய்தது?
குரங்கா? நாயா? அல்ல; இவற்றை
ஆக்கிய திறம் அதுவே "கலை!"
பார்க்கும் குரங்கு, நாய் பகர் "கலைப் பொருள்களே"

## இந்த ஆட்டு மயிரா அந்த அழகிய கம்பளி

வெண்ணெயை அள்ளி அப்பிய வெண்மயிர்
ஆட்டு மந்தையை ஓட்டி வந்தவன்,
கடையிற் கம்பளிப் போர்வைகள் கண்டான்
தொட்டாற் பட்டே! தோற்றமோ கதிரொளி!

"ஆட்டுமயிர் இப்படி ஆன தருமை"
என்றான் இடையன்! குப்பன் இயம்பினான்:

"தொழி லாளிகட்கும் முதலா ளிக்கும்
இடையிடை வேலை நிறுத்தம் இலாமல்
அவர்கள் ஒற்றுமை அடைந்தார். அந்த
அருமையின் விளைச்சலே, அழகைச்
சொரியும் இந்தக் கம்பளத் தொகுதியே!"

## திருடர்-திறந்த வானிலும் புகுவர்

திறந்த வானம்! அவ்வான் நிறைய
இறைந்த முத்தும் மணிகளும் சிந்திய
வயிரத்து வாய்ந்த தட்டும் கிடந்தன!

இந்த வானத்துக் குடையவர் யாரோ?
கதவே இல்லை! உறங்கும் விழியரும்பு
பூக்க வில்லை புதுவையைப்போல,

வீட்டுக் குடையவர் விழிக்க வேண்டும்
இந்தியா ஆள்வோர் இருக்கின்றார்கள்,
அன்பிலா தவர் அவர்; அறமறி யாதார்.

திறந்த வானில் இறைந்த மணிகளை
வயிரத் தட்டொடு மடியில் கட்டுவர்,
வானிலும் புகுந்து வம்பு வளர்ப்பவர்,
கூட்டுக் கொள்ளைக் காகக் கூடவே
இருக்கும் பார்ப்பனர் இரும்புக் கரண்டிகள்,
மக்கள் உரிமையைச் சுரண்டித்
திக்குமுக் காடச் செய்வர் அன்றோ?

## புதுப்படைப்பு

என் வீட்டிற்கும் எழிற் கடற்கரைக்கும்
இடையில் அரைக்கல் தொலைவே இருக்கும்.

மிதிவண்டி பொருத்திய புதுவண்டி ஒன்றில்நான்
ஏறினேன்; கடலின் கரையை எய்தினேன்,

எடுத்துக் குலுக்கியது என்னை ஒன்றே;
அங்கே அழகுற என்னைக் கண்டேன்!

பலரும் இரண்டு பாரதி தாசரைக்
கண்டு வியந்து கொண்டிருந்தனர்.

என்னிடம் இருந்த பொன்னாடை ஒன்றே;
இரண்டு பொன்னாடைகள் இருக்கக் கண்டேன்.

புறப்படும் போதெனைப் புகைப்படம் எடுத்ததும்
திறம் செய்து கடற்கரை சேர்த்ததும் வியப்பே.

உலகின் நலத்தைக் கருதி யுழைப்பவர்,
அறிவை நாளொடு கலந்தனர்! அதனுள்
நன்று குளிக்கும் கலைஞன்,
இன்று புதுமை படைத்தல் எளிதே!

## மாடு மக்கள் ஊர்தி

மனிதனைப் பார்த் துச்சிவனைச் செய்தபின், மாட்டில்
இனிதமர்ந் தூரும் இடையன்—தனைப்பார்த்து
வாய்ந்த சிவனேற மாட்டை இயற்றினான்,
ஆயந்தகற் றச்சன்அந் நாள்!

கற்றச்சன் செய்த கடவுள், உலகத்தில்
பெற்றசெல் வாக்கால் பெருந்தீங்கு—பெற்றோம்;
சிவனுமா டேறினான், சிற்றறிவி னால்வாழ்
பவனும்மா டேறுவதா என்று.

ஏறிச் செலுத்தஎன்றே ஏறென்றார். மாட்டினையே
பேறொன்று பெற்றும் பிழைப்பறியோம்—ஏறி
இளமுதுகிற் குந்தி இருபுறங் கால்இட்டே
உளமகிழ ஓட்டலாம் மாடு.

உழவுக்கும், வண்டி உழைப்புக்கும், அம்மி
குழவிக்குத் தானா, குணமும்—அழகும்
செறிந்திட்ட மாடு? செழுந்தேர் அது என்று
அறிந்திட்டால் மிக்க பயன் ஆம்.

செல்லுகின்ற செல்வத்தை மாடென்பார், நாம்ஏறிச்
செல்லாத மாடும் ஒரு செல்வமா?—இல்லை!
கடைக்கேறிப் போகலாம்; காப்பாகச் சேர்க்கும்,
மடைக்கேறு மண்டுபுனல் போல்.

என்செல்வம், என்னூர்தி என்றே எவனும்
பொன்போலக் காக்கப் புறப்படுவான்—நன்மாட்டின்
மாசெலாம் போகும்; மனம் வளரும்! மற்றும் அது
பேசலாம் நாளடைவில் பேச்சு!

வறியார்க்கு நல்லூர்தி மாடு! கழகச்
சிறியார்க்கும் நல்லுதவி செய்யும்—குறியாய்
நடக்கும்பண் பாடுண்டு, நாட்செலவும் மட்டே,
இடக்கும்பண் ணாதன்றோ மாடு?

மாடு கழிக்கும் கழிவும் மருந்தன்றோ?
நாடு கழித்தொதுக்க வேண்டாமே!—கேடுகெட்ட
குள்ளக் கழுதையும் ஊர்தியாய்க் கொள்ளுகின்றார்,
வெள்ளிமலை ஏற வெறுப்பா?

மாட்டுக்குக் கொம்புநல்ல வாய்ப்பாகும், நாமேறி
ஓட்டுகையில் நம்மை ஒழிக்கவரும்—கோட்டானைக்
குத்திக் கொலைசெய்யும்! கொண்ட தலைவனையோ,
நத்திப் பணிபுரியும் நன்று.

நெருங்கிப் பழசாமை யால்மாட்டின் நீர்மை
சுருங்கிற்று! வீழ்ந்தது தோற்றம்! — கருங்கலும்தான்
கைவைத்தால் கண்ணாடி யாகும்,ஓர் ஆள்கொண்டு
செய்வித்தால் தீரும் எழில்.

முன்நாட்டு மக்களெலாம் மாடூர்ந்தார், முன்நாள்போல்
பின்நாட்டு மக்களும் பேரூர்தி—தன் மாடாய்க்
கொண்டு களிக்கவே! கொள்ளாரும் நல்லவழி
கண்டு களிக்கும் படி!

## கிளிக்குஞ்சு கண்ட உலகம்

வளர்ந்த தென்னையின் மட்டைக் கிடையில்
பன்னாடையெனும் பஞ்சு மெத்தைமேல்
கீச்சுக் கீச்சென்று கிளிக்குஞ்சு பாடியது,
அருகில் ஈன்ற அன்னை இருந்தாள்.

வானிடை உலவிய வன்சிறைப் பருந்து
திடீரென்று தாய்க்கிளி மேனி தீண்டித்
துன்புறும்படி தூக்கிப் போனதே!

கிளிக்குஞ்சு காக்கைக் குஞ்சியிடம் செப்பும்:
என்தாய், பருந்தை எடுத்துப் போனாள்.
போகையில் பாடிக் கொண்டே போனாள்,
அந்தப் பாட்டும் நல்லபாட்டு என்றது.

காக்கைக் குஞ்சு கழறு கின்றதாம்:
எங்கே தூக்கிப் போனாள் பருந்தை?

கிளிக்குஞ்சு தானும் கிளத்துகின்றது;
பருந்தைத் தீயர் வருத்தி யிருப்பார்
ஆல மரத்தில் கொண்டுபோய் அமைக்க
எண்ணி யிருப்பாள் என்று கூறவே,
சற்றுநே ரத்தில் தாய்க்கிளி யின்தலை
கிளிக்குஞ்சு காணக் கீழே விழுந்தது.

காக்கைக் குஞ்சு ஏன் என்று கழறவே,
கிளியின் குஞ்சு கிளத்து கின்றது?
என் தாய் உடம்போ அங்கே இருக்கும்
தலையோ இரை எனக்குத் தர வந்திருக்கும்.
என்று சொல்லும் போதே எதிரில்
தாயாம் காக்கை சரேலென வந்தது.

கிளிக்குஞ்சு. கெட்ட காக்கையே கேட்பாய்:
அதோ என் அம்மா! அவளிடம் சொல்லி

உன்னைக் கொல்லுவேன் ஓடு நீ என்று
சொன்னது! காக்கை சொல்லு கின்றது;

பச்சைக் கிளி ஒன்று பருந்தைத் தூக்கும்
உலகை நீ உண்டு பண்ணினாய்! அன்றியும்
அறுத்த கிளித்தலை அன்பு மகவுக்கு,
இரைதர வருவதோர் இன்ப உலகை
நீயுண்டு பண்ணினாய்!

நெடிய கடவுள்

உன் காப் படுத்தும் என்னையும் படைத்த இவ்
உலகில் உன்னுலகு செல்லா தென்று
அலகால் காக்கை அழித்தது குஞ்சையே.

## வீட்டுத் தோட்டப் பூங்கா

தஞ்சையை விட்டுத் தண்வயல் "வடவார்ப்
புகைவண்டி நிலையம்" போந்ததென் வண்டி.

வண்டி நிலையத் தலுவலன் வாழும்
தனி வீடொன்றை இனிது நான் கண்டேன்.
நாலைந்து வாழைகள் நறுநிழல் தந்தன;
அகத்தி யொன்றும் அழகொடு நின்றது;
இளைய மாமரம் தளிர்த்திருந்தது;
புடலை, அவரை, பூசணி எல்லாம்
கொடி நீண்டு குளிர் இலையோடு படர்ந்தன;
பன்னிற நன்மலர் படைத்தன செடிகள்!

ஐம்பது சதுர அடி அளவுள்ள
தரையில் இந்தப் பச்சைத் தழையிடை,
செந்நிற ஓட்டு வீடு திகழ்ந்ததால்,
நீல மாமுகில் நீங்கா நிலையில்
செம்பருத்தி தன்னொளி சிறிது சிறிது
காட்டியதேபோற் காட்சி தந்தது.
வீட்டின் கொல்லைப் புறத்தில் விரிபுனல்
வாய்க்கால் ஒன்று வாய்ந் திருந்தது.
ஒருத்தி; என் மகள்; மரங்கொடி, செடிக்கெலாம்
அன்னை போல்வாள்; அவள் ஒரு வாளிகொண்டு
செல்வாள்; நீர்மொண்டு மீண்டு தன்னகுஞ்
செல்வர் உண்ணச் சேர்ப்பாள்! காண்கையில்
எனது வண்டி எடுத்தது நடையை.
இனிய காட்சியை இழந்தன கண்கள்.

அரசினர்க் கொன்று சொல்ல ஆசை,
வீட்டுத் தோட்டப் பூங்கா
நாட்டுவார்க்குத் தேவைநற் பரிசே.

## சோலை தரும் நன்கொடை

மலரோ மணங்கொடுக்கும்
வண்டுகள் இசை கொடுக்கும்
சலசலென்று நீர் கொடுக்கும் ஓடையே—தன்
கடுஞ்சூட்டில் தணிவு கொடுக்கும்
கோடையே!

தென்னை இளநீர் கொடுக்கும்
தேன்வாழை பழம் கொடுக்கும்
புன்னையோ முத்தம் கொடுக்கும்
கையிலே—தான்
போனதாய் எழுதிக் கொடுக்கும்
வெய்யிலே!

முல்லை சிரிப்புக் கொடுக்கும்
மொய்யலரி சினம் கொடுக்கும்
சொல்லிலே, தமிழ் கொடுக்கும்
பச்சைக்கிளி—தன்
தோகையால் எழில் கொடுக்கும்
அச்சுமயில்!

மந்தியோ பால் கொடுக்கும்
வந்தகுட்டி வாய் கொடுக்கும்
சிந்தியே தேன் கொடுக்கும்
பூக்காடு—மேல்
செந்தமிழ் உண்ணக் கொடுக்கும்
ஈக்காடு

## எறும்பின் தவம்

தரையிற் கிடந்த தங்கத் துகள்கள்
வரிசை மாறாது நடந்தன. அவற்றை
இரைக்குச் செல்லும் எறும்புகள் என்றனர்.

அரிய போர்வீரர் அணிநடை பயில
ஓராண்டு செல்லும் ஊசிமுனை எறும்புக்கு
ஈராண் டாயினும் வேண்டுமே என்றேன்.
வரிசை, ஒழுங்கும், மாறு படாமை
எறும்புகட் கெல்லாம் இயல்பில் அமைந்தவை!
மனிதன் ஒழுக்கநூல் ஆர்த்தான் ஆயினும்
இனி அவன் திருந்துதல் எந்நாள் அறிகிலேம்
என்றனர்! இதனைக் கேட்டஎன் உதட்டு
மன்றில் சிரிப்பு வந்து குதித்தது.

எறும்புகள் நடந்துகொண் டிருந்தன; வழியைச்
சிறுகல் தடுத்தது; ஏறி இறங்கி

எறும்புகள் நடந்துகொண் டிருந்தன! பெட்டி
குறுக்கில் கிடந்தது சுற்றிக் கொண்டு
போகும் மனிதரின் மனநிலை பெறாமல்
வழிகோ ணாமல், வரிகோணாமல்
பெட்டிமேல் ஏறிப் பின்புறம் இறங்கி
எறும்புகள் நடந்து கொண் டிருந்தன; சுவரொன்று
நடுவில் நின்றது; நடுங்க வில்லை,
மலைக்க வில்லை, வலிகுன்ற வில்லை,
நடையின் விரைவு தடைபடவில்லை:
எறும்புகள் நடந்து கொண் டிருந்தன! அரிசிநொய்க்
குவியலை அடைந்தன. ஒவ்வொன்று தூக்கித்
தாவ முடித்தன தம்புற்று மீண்டே.
மருந்தில்லாத நோய் சோம்பல்;
அருந்தவம் ஊக்கம்! அன்பு மக்களே!

## ஏழையின் குடிசை

பானையிலே நற்சிலந்திக் கூடு பழ அடுப்பில்
பூனையின் தூக்கம், பொலிஎருமை மாட்டின்
முதுகெலும்பு போலும் முருங்கைக்காய் காய்க்கும்.
அதுவும் தலைமொட்டை. அன்னை கிழவி

மணைக்கட்டை மேல்தனது மண்டை உறுத்தக்
கணுக்கால் வயிறெட்டக் கட்டிச் சுருட்டிப்
படுத்த படுக்கை, பசிக்கோ குடல்தான்
கடித்துண்ணத் தக்க கறியுணவு, பச்சை
மயிலடியைப் போன்ற இளைநொச்சி மண்டும்
அயலிடத்தில் நின்றபடி அம்மே எனக்கதறும்
வற்றல் பசுமாட்டின் வாய்க்கதறல். —காற்றசைவைச்

சற்றும் பொறுக்காமல், தள்ளாடும் மேற்கூரை.
ஆன இவையும் அடுக்காய் அமைந்ததுதான்
கூனக் கிழவர் குனிந்து புகும்குடிசை...

## தமிழகம்

ஆதி மனிதன் தமிழன்
ஆதி மனிதன் தமிழன்தான்!
அவன்மொழிந்ததும் செந்தமிழ்த்தேன்!
மூதறிஞர் ஒழுக்க நெறிகள்
முதலிற் கண்டதும் தமிழகந்தான்!

காதல் வாழ்வும், புகழ் வாழ்வும்,
காட்டியதும்தமிழ் நான்மறைதான்!
ஓதும் அந்தத் தமிழ் நான்மறை
உலகம் போற்றும் முத்தமிழ்தான்.

நெய்தல் நிலம்

நீளக் கடலும் முத்துப் பெட்டி;
நெய்தல் நிலத்துப் பெண்மான் குட்டி,
ஆள னுக்கே வரித்து கட்டி
அளிக்கும் உதவி சர்க்கரைக் கட்டி,

ஆதிமொழி தமிழ்மொழி
குறிஞ்சி நிலம்

வேளை பார்க்கும் கிக்கிலிக் குருவி
மீனை வீசும் மலை அருவி
காளையின் மேல் கண்வாள் உருவிக்
கதை முடித்தாள் அவள் மருவி.

முல்லை நிலம்

காட்டுமயில் கூட்டம் கூடிக்
களித்திருப்பார் குரவை ஆடிக்
கூட்டமுதப் பாட்டும் பாடிக்
குழலூதிடும் ஆயர் பாடி.

மருத நிலம்

பரந்தையிடம் சென்று வந்து
பஞ்சமான நிலை பகர்ந்து,
சிரித்த கணவன் மேல்சினந்து
செங்கை தொட்டாள் பின் உவந்து.

பாடிவரும் ஆறுகள் பல,
பரந்துயர்ந்த மலைகளும் பல,
ஆடி நடக்கும் உழவு மாடு
கொடுக்கும் செல்வம் மிகப் பலபல.

ஓடை என்பது மலர்ச் சோலை
ஒழுக விட்ட தேனாலே
கோடை பறக்கும் முன்னாலே
குளிரும் தென்றல் அன்பாலே!

தாய்நாடு

அறங்கிடந்து பண் பாடும்.
அன்பிருந்து சதிர் ஆடும்,
திறங்கிடந்த நாகரிகம்
செய்து தந்தது தமிழ்நாடு.
மறங்கிடந்த தோள் வீரர்
மகளிர் தரும் பெருங்கற்புச்
சிறந்திருக்கும் தமிழ் நாடு
செந்தமிழர் தாய் நாடு!

நெய்தல் நிலம்

நீளக் கடலும் முத்துப் பெட்டி;
நெய்தல் நிலத்துப் பெண்மான் குட்டி,
ஆளனுக்கே வரித்து கட்டி
அளிக்கும் உதவி சர்க்கரைக் கட்டி.

ஆதிமொழி தமிழ்மொழி
குறிஞ்சி நிலம்

வேளை பார்க்கும் கிக்கிலிக் குருவி
மீனை வீசும் மலை அருவி
காளையின் மேல் கண்வாள் உருவிக்
கதை முடித்தாள் அவள் மருவி.

முல்லை நிலம்

காட்டுமயில் கூட்டம் கூடிக்
களித்திருப்பார் குரவை ஆடிக்
கூட்டமுதப் பாட்டும் பாடிக்
குழலூதிடும் ஆயர் பாடி.

மருத நிலம்

பரந்தையிடம் சென்று வந்து
பஞ்சமான நிலை பகர்ந்து,
சிரித்த கணவன் மேல்சினந்து
செங்கை தொட்டாள் பின் உவந்து.

பாடிவரும் ஆறுகள் பல,
பரந்துயர்ந்த மலைகளும் பல,
ஆடி நடக்கும் உழவு மாடு
கொடுக்கும் செல்வம் மிகப் பலபல.

ஓடை என்பது மலர்ச் சோலை
ஒழுக விட்ட தேனாலே
கோடை பறக்கும் முன்னாலே
குளிரும் தென்றல் அன்பாலே!

தாய்நாடு

அறங்கிடந்து பண் பாடும்,
அன்பிருந்து சதிர் ஆடும்,
திறங்கிடந்த நாகரிகம்
செய்து தந்தது தமிழ்நாடு.
மறங்கிடந்த தோள் வீரர்
மகளிர்தரும் பெருங்கற்புச்
சிறந்திருக்கும் தமிழ் நாடு
செந்தமிழர் தாய் நாடு!

## இரட்டைப் பேறு

பொன்முகம் மலர்விழி கருங்குஞ்சி பொலியும்
என்மகனின்மகன் ஒருவன் இதழால்
விரலைச் சுவைத்தே ஒருபெருந் தடுக்கில்
கிடந்தான்.

அயலூர்க் கிழவி ஒருத்தி
நேரில் அக் குழந்தையைக் கண்டாள்; நெடுஞ்சுவர்
ஓரமும் அவள் அவ் வோவியம் கண்டாள்!
திடுக்கிட்டுக் கிழவி செப்பு கின்றாள்:

"சுவர்க் கண்ணாடியே சுவர்க் கண்ணாடியே
பிள்ளை உருக்காட்டும் பெருங்கண்ணாடியே
என்னுருக் காட்டா திருந்த தென்ன?
முதுமையும் சாவும் ஒன்றெனும் முடிபா?"

என்று துடிக்கையில் ஈன்றவள் வந்தே
இரண்டும் என் உடைமை என்றெடுத்தாள்.
எதிரில் நின்ற கிழவி,
முதுமையும் சாவும் எனக்கென்றாளே.

## ஞாயிறு வாழ்க!

வருக ஞாயிறு! வருக ஞாயிறு!
விரிதிரைத் தமிழகப் பெருங்கடல் மீதில்
அறிவொளி பெருக்கி நிறைவாழ் வளிக்க
வருக ஞாயிறு! வருக ஞாயிறே!

பனிமலை வடக்கில் புனலுள் கிடக்கையில்
இனிதுயர்ந்த தனிப்பெரும் சீர்த்தித்
தமிழர்கள் இந்நாள் தந்நிலை தளர்ந்தார்;
மடமையில் ஆழ்த்தப் பெற்றனர்; அடிமை
நன்றென ஒப்பினார்; நலிந்தனர் அன்னார்.
இன்று புத்தொளி எய்திவாழ் வெய்த
ஞாயிறு வருக! ஞாயிறு வருக!

முத்தமிழ் வல்லவன்; தித்திக்கும்படி
செய்யுள் செய்யும் திறத்தினன்; திராவிடர்
இனநலம் காத்தலே இன்பெனக் கொண்டவன்;
ஏ கே. வேலன் எழுத்தில் எழுந்தனை,
அன்னவன் நெஞ்சத் தருளில் வாய்த்தனை;
ஞாயிறே, நற்றமிழ் ஏடே நீ இதோ
இன்பத் தமிழர் இருகை ஏந்தப்
புகழ்ச்சிறகு கொட்டிப் போந்தனை! நன்றே
வருக ஞாயிறே, விடுதலை,
திருநாடு பெற்றிட வருக! வாழியவே!

## வருவாய் கதிரே

வருவாய் வருவாய் கதிரே—தைம்
மதியே ஒளியே வருவாய்
திருவே உணர்வே வருவாய்—எம்
செயலின் தெளிவே வருவாய்.

இருளும் பனியும் குளிரும்—பல
இடரும் தொடரா வகையே
புரிவாய் சுடரே வருவாய்—எம்
பொங்கற் புதுநாள் வருவாய்.

விலகாப் பாசிப் பொய்கை—மிசை
விரியும் செந்தாமரைபோல்
அலைசேர் நீலக் கடல்மேல்—கதிர்
அவிழும் பகலே வருவாய்!

கலையின் முதலே வருவாய்—எம்
கண்ணுள் மணியே வருவாய்
மலையும் காடும் தெருவும்—ஒளி
மருவப் புரிவாய் வருவாய்.

காவிரி ஆற்றுத் தண்ணீர்—எம்
கழனிகள் தோறும் பாய்ச்சி
ஆவலின் நாட்டைப் பாடி—நல்
அடைவுறும் எருதால் உழுதே,

தூவிய விதையும் காத்தோம்—வயல்
சுற்றிலும் வேலி அமைத்தே;
ஆவன செய்தோம் மடைநீர்—வடி
வாக்கித் தேக்கியும் வந்தோம்.

ஆழக் கிடங்கெடுத்தே—நிறை
வாக தண்ணீர் தேக்கி
வாழை, கரும்பு நட்டோம்—கால்
வைத்தே சாரம் செய்தோம்,

தாழப் புதைத்த மஞ்சள்—பயிர்
தழையத் தழையக் காத்தோம்
வாழ்வின் பயனைக் கோரி—உன்
வரவை நோக்கியிருந்தோம்.

வருவாய் வருவாய் சுடரே—பனி
மாற்றித் தோற்றிய மணியே,
புரைதீர் வாழ்வின் பயனே—யாம்
புதுநெல் அறுவடை செய்தோம்.

கரும்பு வெட்டிச் சேர்த்தோம்—செங்
கனியொடு வாழை சாய்த்தோம்
திரும்பும் இடம் எங்கெங்கும்—நல்
திருவே புரிவாய் வருவாய்.

எருமைக் கண்போல் நாவல்—கனி;
இலந்தை; மாதுளை, கொய்யா,
பெரு முந்திரியின் பருப்பும்—தேன்
பிழிவும் யாண்டும் கொழியும்.

மருவின் கொழுந்தும் மலரும்—மணம்
மருவத் திருவே வருவாய்.
வருவாய் வெயிலே அழகே—எம்
வாழ்த்துக் குரியோய் வருவாய்.

புதுநெல் அரிசியினோடு—பால்
பொங்கல் பொங்கிட எங்கும்
அதிர்வளை மங்கைமார்கள்—தம்
அன்பும் தேனும் கலந்து,

முதிரா வழுக்கை இளநீர்—நனி
முற்றல் கழையின் சாறும்
உதிர்மாதுளையின் முத்தும்—தந்
துவக்க உவக்க நின்றார்.

பொன் வண்ணப் புத்துருக்கு—நெய்
புறங்கை ஒழுகப் பொங்கல்,
இன்பம் பெறுமாறுண்போம்—எம்
இனிதாம் பொழுதே வருவாய்.

சொன்னோம் பொங்கல் வாழ்த்தே—எம்
தூய்மைத் தமிழால் நாங்கள்
தென்பாங்கடைந்த செல்வம்—எம்
திராவிடம் வாழியே நன்றே.

## ஆறையில் ஓடம்

வீற்றிருக்கும் மணிமாடம்
விருந்துண்ணும் நடுக்கூடம்
ஆற்றிலே நடமாடும்
அழகான நம் ஓடம்.
ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம்!

காற்றே குளிர்ந்துவரும்
கண்ணிலே விண்தெரியும்
சாற்றிலே சர்க்கரை போட்ட
தமிழ்ப் பாட்டும் தானேவரும்.
ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம்

சிற்றலையின் வரிசையிலே
சேல்மீன்கள் விளையாடும்
முற்றிவிட்ட பகைபோல
முதலை ஒன்று குறுக்கோடும்.
ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம்!

கற்றாழை மிதந்துவரும்
கண்ணெதிரில் வாள்சுழற்றும்
முற்றாத தென்னம்பாளை
முன்னே வந்து தான்சிரிக்கும்.
ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம்!

மேற்கை வெறுத்துவரும்
கிழக்கு நோக்கி விரைந்தோடும்
ஆற்றில் மிதக்கும் ஓடம்
காற்றுக்குமேல் ஆட்டம் போடும்.
ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம்!

கீற்றுத் தென்னைமேலே
கிள்ளைகளும் தமிழ்பேசும்
சேற்றுத் தவளைகளும்
திடும்திடும் பறைவீசும்.
ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம்!

வெள்ளாடு தழைமேயும்
வெய்யில் குடைபிடிக்கும்
புள்ளிமான் தென்துறையில்
பூரித்து நீர் அருந்தும்.
ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம்!

கள்ளிமலர் பூத்திருக்கும்
பொன்வண்டு காத்திருக்கும்
துள்ளி வரால் மீன்கள்
சூறையாடும் மாம்பழத்தை.
ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம்!

வானம் கருத்ததண்ணே
காற்றுமழை வந்ததண்ணே
ஏனம் கவழ்ந்ததண்ணே
என் கஞ்சி சாய்ததண்ணே.
ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம்!

கை சோர்ந்து போன தண்ணே
கண்தெரிய வில்லை அண்ணே
ஐயையோ நம் ஓடம்
ஆற்றில் தள்ளாடுதண்ணே.
ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம்!

ஒய்யென்று காற்றடித்தால்
மூச்சே ஒழிந்துவிடும்
பொய்தானோ நம் வாழ்வு
போனால் வராதே அண்ணே.
ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம்!

## பனை

மூதலை முதுகின் அடிமரமும் அன்பு
மதலை தலைக்குலையும், மற்றக் குதலை
தனைஒப்பச் சாறும், தமிழ்ஏடும் நல்கும்
பனைஒப்ப துண்டோ பகர்.

பசுமை தடவி, மெருகிப் பலவாம்
விசிறிகள் விற்பான்போல் நின்றே இசைபாடும்,
அப் பனையைக் கற்பனையாம் கற்ப கமாம் என்றால்
ஒப்பனை கொள் ளாதிவ் வுலகு.

காலாணி என் வாரை! கட்டுவதும் என்நாரே!
மேலாடல் என் ஓலை! வீடுகளும், மேலும் உண்ணும்
நுங்கு, கருப்பட்டி, நூல்தான், பதனி. பனாட்
டெங்கும் என்சொத் தென்னும் பனை.

அகணிசேர் மட்டை மன் னாடை விரல்போல்
மிகவாம் பனம்பூ, விளைத்த தொகுகாய்கள்
உள்நாடிக், கண்டேன் உறிஞ்சி தமிழ்த்தேன் மங்கையரின்
கண்ணாடிக் கன்னம் நிகர் நுங்கு.

## வலைக்கம்பி அறை வடவன் விலங்கு

### அறிவோம்போடா என்றன புறாக்கள்

வலைக்கம்பி அறையில் வளர்ப்புப் புறாக்கள்
நிலைக்கும். இன்ப நிகழ்ச்சி கட்கும்,
இடையூ றேதும் இன்றி வளர்ந்தன.
பெட்டை முட்டைஇடும்; அதைப் பெட்டையும்
ஆணும் அன்புடன் அடைகாத் திருக்கும்;
ஒன் றிரண்டு குஞ்சு பொறிக்கும் நன்று.
பெரிதாம்; இவ்வாறு பெருகும் புறாப்படை!

வளர்ப்பவன் உள்ளங் கையில் வைத்த
தீனியை அவனின் தோளினின் று தின்னும்!
வளர்ப்பவன் வாயின் எச்சில் நீரை
உண்ணும் அந்த வண்ணப் புறாக்கள்!

நேரு தமிழரை நெருக்கு வதுபோல்
வளர்ப்பவன் புறாக்களை வருந்திய தில்லை.

வலைக்கம்பி அறையில் சிலகம்பிகளைப்
பழுது பார்த்த பொழுது புறாக்கள்
பறந்துபோய்ப் பக்கத்து-உயர்ந்த
மதில்மேல் வரிசையாய் உட்கார்ந்து கொண்டன.

வளர்ப்பவன் அவற்றை "வருவீர்" என்றான்.
"வலைக்கம்பி அறை வடவன் விலங்கு
வாரோம் வாரோம்" என்றன புறாக்கள்.
"ஒன்றாய் இருக்கலாம் என்றான் வளர்ப்பவன்;
"நன்றாய்த் தின்னவா நாடொறும் நாங்கள்
பொறிக்கும் குஞ்சு களை நீ?
அறிவோம் போடா" என்றன புறாக்களே!

## செயற்கை குட்டி நிலாவும்
## இயற்கை வட்ட நிலாவும்

வட்டநிலா:

குட்டிநிலாவே குட்டி நிலாவே
எங்கே வந்தாய் குட்டிநிலாவே?

குட்டி நிலா:

வட்டநிலாவே, வட்டநிலாவே
வந்தேன் உன்னிடம் வட்டநிலாவே.
கெட்ட உலகம் வாழும் வழியைக்
கேட்க வந்தேன் வட்டநிலாவே.

வட்ட நிலா:

எட்ட இருக்கும் வட்டநிலா நான்
எனக்கா தெரியும் குட்டி நிலாவே?

குட்டி நிலா

வளர்ச்சி பெற்றாய், குளிர்ச்சி பெற்றாய்.
வட்டநிலாவே வாய்திற வாயோ?

வட்டநிலா :

தளர்ச்சி பெற்றது தட்டை யுலகம்
சண்டை பிடித்தது குட்டி நிலாவே?

குட்டிநிலா :

களைப்பு நீங்க உலகம் ஒருவன்
கைக்குள் வருமோ வட்ட நிலாவே

வட்டநிலா ;

ஆயிரங்கோடிச் செலவில் வந்தேன்
அறிவைக் கொடுப்பாய் குட்டி நிலாவே,

வட்டநிலா :

ஆயிரம் கோடியை அரிசிக்காக
அளித்த துண்டோ குட்டி நிலாவே?
போய்விடு, போய்விடு குட்டிநிலாவே

போய்விடு,

என்றது வட்டநிலாவே,
தீயில் எரிந்தது குட்டி நிலாவே.
தீய்ந்து விழுந்தது குட்டி நிலாவே'

## உயிர் உறங்கா இரவு

உலகத்தின் சுழற்சினால் பரிதிக் கோளம்
ஒளிமாற்றி எழுவண்ணம் முகிலில் பூசும்.

பலகற்றும் அறிவில்லா மனத்தினைப்போல்
பரவும் இருள்; பாழ்பட்ட சிற்றூர் தன்னை.

நலமுற்றச் செய்திடுவோம் எனத்துணிந்த
நல்இளைஞர் போல் விண்மீன் எங்கும் மின்னும்!

விலகட்டும் அறியாமை என முன் நிற்கும்
பெரியராய் வெண்ணிலவு விரிவான் தோன்றும்.

வான்பறவை இனமெல்லாம் மரங்கள் தோறும்
மயக்குறுதல் மக்களைப்போல் குரல் அடங்கும்.

தேன்பறவை சிற்சிலதம் குரல் அமிழ்தைத்
தித்திக்க எங்கிருந்தோ முணுமுணுக்கும்.

ஆனிரையும் ஆடுகளும் ஆன்றவர்போல்
அடங்கும்; அலை ஆழியோ முரசொலிக்கும்!

ஊனுறங்கும், உயிர் உறங்கா துணர்வில் ஓங்கி,
ஒளியுலகை வரவேற்க விழித்திருக்கும்.

## நிலவே

நிலவே நீ முன் நடந்ததைக் கூறுவாய்,
மெய்யாகக் கூறுவாய்!
இலகு செந்தமிழையும் உன்னையும் கூட்டி
இயற்கை அன்னை வளர்த்த நிலையோ பாலூட்டி?

சங்கமேறித் தமிழுலகிருள் போக்கித்
தாவியெமில் வானமிசை நீயுலவத்
தமிழ் வாழ்த்தி உனைவாழ்த்தி மக்கள், வாழ்வு
தொடங்கியதை மறைத்தனையோ குளிர்ந்த
வெண்ணிலவே நீ!

வடமொழிக் குதவி தமிழ்மொழி அன்றோ?
மறுமொழி கூறா திருப்பது நன்றோ?
கடல்சூழ் வையம் ஆண்டது தமிழோ?
கையேந்தி வந்தவர் பேசிய மொழியோ?

ஆரியர் ஆட்சி வாய்ந்த பின்னை
அழகிய தமிழ் நூலாகிய பொன்னை
வேரொடு மாற்றிட வஞ்சம் என்னென்ன
விளைவித்தார் அதைத்தான் கேட்டேன் உன்னை
நிலவே நீ முன் நடந்ததைக் கூறுவாய்!

## கோடைக் கொடுமையும் மாரியின் வரவும்

வெயிலின் கொடுமை விலக்கிட எண்ணிக்
கடற்கரைப் பக்கம் நடந்தேன், கடலோ
உலைநீர் போல கொதித்தலைந் துயிர்த்தது;
கடல்காற்று ஆவியாய்க் கனன்று வீசிற்று;
வான வெப்பத்தால் போனகதிர் சிவந்தது.

எழுந்த வெண்ணிலா எண்ணெயில் பொறித்த
அப்பளம் போலக் கொப்பளம் கொண்டது;
வெம்மையால் அம்மை வார்த்ததுபோல
மீனினம் விசும்பில் தான் எழுந்திட,
வைக்கோலில் சுற்றிய வெள்ளரிப் பழம்போல்
வெக்கையால் மேனி வியர்த்து வாட்டிற்று.

யான் ஒருவன் மட்டுமா எய்தினேன் இன்னல்?
இல்லவே இல்லை; எல்லா மக்களும்
வந்தேறிகளால் நொந்தழுவார்போல்,
கோடைக் கொடுமையில் வாடலானோம்.
புரட்சியின் புழுக்கத்தின் பின்
பொதுவுடைமைபோல் புகுந்தது மாரியே!

## இயற்கைப் பாடம்

என்னுடைய தோட்டத்தில் பலா, மா, வாழை,
இன் இளநீர் தெங்குபத்து வைத்தேன்; காலம்
தன்னுடைய பிள்ளைகளாய் வளர்த்தவற்றைத்
தாரான மாய்விளைவைப் பருவந் தோறும்

முன்னடையச் செய்வதிலே கணக்கவில்லை.
முன்னேறும் விலையேற்ற நாளில், தோட்டம்
கன்றுடைய பசுவைப்போல் என்குடும்பம்,
வரும்விருந்து களிப்புறவே விளைவை ஈயும்.

தோட்டத்து விளைவெல்லாம் என் உழைப்பா?
சுழன்றுவரும் கதிர்மதியின் மழைவிளைச்சல்!
ஊட்டத்தைக் கொடுக்கின்ற கனியும் காயும்
ஊரார்க்கு மலிவாகக் கிடைக்கும் போது
நாட்டாரே, நான் ஒன்று நினைத்துப் பார்த்தேன்.
நாகரிகம் மிகுந்துவரும் உலகில், நாட்டில்
ஓட்டமிகும் இயந்திரங்கள் பொருள் உற்பத்தி
ஓயவில்லை தொழிலாளர் உழைப்பினாலே.

இயற்கையிலே காணாத ஒருவியப்பு,
பொருள்விளைவு நூறுமடங் கென்கின்றோம் நாம்;
பயக்கின்ற பொருள்எல்லாம் மலிவா? இல்லை,
முன்னேற்றம் படுவேகம் என்கின்றோம் நாம்.
செயற்கையிலே பொருளாளி தான் கொழுக்கச்
செத்தொழியும் தொகை மக்கள் எண்ணில்லாதார்;
அயற்கையிலே பணம்குவிய அடிமை ஆகி
அல்லலுற்று வாழ்பவர்கள் கோடி கோடி!

பண்டங்கள் பெருக்குவதின் மூலம் நாட்டில்
பணக்காரன் சுரண்டுகிறான், வறுமை நோயை
எண்டிசையும் பரப்புகிறான், இதற்கு மாறாய்
இயற்கைவிளை பொருள்கள் நமைச் சுரண்டல் இல்லை.
''நண்பர்களே, உமக்குண்மை ஒன்று சொல்வேன்.
நானிலத்தில் வளர்ந்துபயன் விளைத்த போதும்
கொண்டெவற்றையும் நாங்கள் தின்பதில்லை;
கொழுப்பதில்லை; கொடுக்கின்றோம் உழைத்தோருக்கே'

என்றன்முன் விளைந்தபல புல்லும் ஏனை
எழுந்தசெடி, கொடி, மரமும் இயம்பக் கேட்டேன்
நன்று இதனை நாடெங்கும் சொல்லுகின்றேன்,
நாட்டில் பொதுவுடைமைக்கு வித்தி தென்றேன்.
கொன்றழிக்கும் முதலாளி என்றில்லாமல்
கூட்டுடமை பயன்மரமாய், இயற்கை அன்னை
அன்புயிராய், தொழிலியலை மாற்றல் வேண்டும்.
அதற்குபின் துன்பில்லை, சுரண்டல் இல்லை.

## எக்காளக் குயில்

நின்றசெங் காந்தள்பூ நேரில் கை ஏந்த நெடும்
கொன்றை மலர்ப்பொன்னைக் கொட்டுகின்றாள்—என்றே
அடைகுயில்கள் எக்காளம் ஆர்த்தெனவே, மண்ணில்
கொடை வாழ்க என்று குறித்து.

## பட்டணத்தான்

கொல்லையில் பரணின் கொடிகளி னின்றே
இருபது புடலங் காய்களும், இரண்டு
பாம்பும் தொங்கின. பட்டணத்தான்
பொறுக்காய் இரண்டு புடலங்காய்களைப்
பறித்துப் பையில் போட்டுக் கொண்டு
பின்சென்று பாம்பைத் தொட்டான்;
நஞ்சென்று கதறினான் நறுக்கென்று கடிக்கவே.

## என்றைக்கும் பஞ்சமில்லை

கொன்றைக்கும் முல்லைக்கும் கொம்புக்கும் கள்ளுக்கும்
என்றைக்கும் பஞ்சமே இல்லையே, இலைறைக்கும்
ஊதவில்லை என்றதுண்டா உள்ளவண்டு? வெள்ளத்தேன்
போவதில்லை என்றதுண்டா? போய்.

## சின்ன பெண் ஆசை

மணங்கொண்டு தென்றல் வரும்என்றார் ஊரார்!
மணஞ்செய்ய மாப்பிள்ளையா இங்கே கொணரும் என்று
பால்மறவாப் பாவை வினாவப் பரிந்து தாய்
தேன்மறவாப் பூமணம் என்றாள்,

## சாவாத உழவன்

வெயிலில் உழவன் வியர்க்க உழுதிடும்
வயல் அயல் மரத்து நிழலும் சுட்டதால்
குளிர்பொருந்து கூடம் சென்றுபின், மாலைஅவ்
வயலிடை வந்தேன் உழவன்
உயிரோ டின்னும் உழுகின்றானே!

## துலங்கா மூஞ்சி உலகம்

கூடத்தில் ஆண்சிட்டைப் பெண்சிட்டுக் கூடிப்பின்
கூடிக்கூ டிக்கூடிக் கூடிப்பின்—கூடி
விலகி அரிசி விளைந்தும் துலங்கா
உலகில் விழித்தன உற்று.

## யார் குற்றவாளி?

கொஞ்சும் குயில் ஒன்று கூகூ என்றது
தென்றலால் அசைந்த செவ்விதழ் அல்லிதான்
இகழ்ச்சிச் சிழ்க்கை அடித்தாய்த்
தகாதிது தடபுடா என்றது தவளையே.

## என் நிலைக்கு முல்லை சிரித்தது

இரவு தங்கிப் பகலில் வந்த என்
வரவுக்கு மனைவி கண்சிவந்தாள்
மலர்வனம் சென்றேன் அங்கும்
அலரிகண் சிவந்தது! முல்லை சிரித்ததே.

## உரிமைக் கொண்டாட்டமா?

புல்வெளி, சிறிய குன்று
புனல்வற்றா ஓடை சார்ந்த
நல்லதோர் காடு நோக்கி
நடந்தனர் வேடர் சில்லோர்.
வல்வலை கட்டினார்கள்;
விலங்குகள் வளைக்கலானார்;
ஒல்லெனப் பறை, தப்பட்டி
ஒலித்தனர் காட்டில் எங்கும்!

தாய்க்குதிரைதன் குட்டி
தன்னோடு நடுக்கம் எய்தி,
ஏய்ப்பவர் கட்டி வைத்த
வலையினில் ஏகி வீழச்,
சாய்த்தனர் தரையில் வேடர்
தாம்பினால் கட்டிச் சென்றார்!
தாய் செல்லும் குட்டி செல்லும்
தம் காட்டைப் பார்த்த வண்ணம்!

குட்டியைத், தாயை; வேடர்
குப்பன்பால் விற்று விட்டார்.
அட்டியில் லாது குப்பன்
அவற்றினை வளர்த்து வந்தான்.
குட்டிதான் வண்டி காக்கும்
குதிரை வீரன் என்று கண்டான்.
கொட்டில் தாய் வருந்திக்
கிடந்தது காட்டை எண்ணி.

மண்டிடு தீனி தின்று
வளர்ந்திட்ட குட்டி தன்னை,
வண்டியிற் பூட்டலானார்,
வருத்தத்தை வழக்க மாக்கிக்
கொண்டது குட்டி! ஓர் நாள்
குடைசாய்ந்து போன தாலே
வண்டியாற் பட்ட பாட்டை
வந்து தன் தாய்க்குக் கூறும்;

வண்டியிற் கட்டப் பட்டு
வருந்திடு கின்றேன் நாளும்!

புண் தொடை தன்னில் கொண்டேன்;
புழுவெனத் துடித்தேன் அம்மா!
கொண்டதோர் அடிமை தானேன்,
குன்றொத்த வண்டி தன்னை
அண்டாத நிலைமை பெற்றால்
அதுவே என் உரிமை வாழ் வாம்!

என்றது குதிரைக் குட்டி!
இதற்குள்ளே குப்பன் வந்து
குன்றுநேர் குட்டி தன்னை
வண்டிக்குக் கொண்டு போனான்;
நின்றிட நேரமின்றி
நெடுவண்டி தனை இழுத்துச்
சென்றிடும்; இவ்வாறாகச்
சென்றன பத்துத் திங்கள்.

வண்டியை இழுக்கக் குட்டி
மறுத்தது! கண்ட குப்பன்
சண்டியே, "இனிமேல் நீயோர்
தனி "ஏறு குதிரை" என்றான்.
கண்டான்கூழ் பெற்ற ஏழை
குதிப்பெனக் குதித்துக் குட்டி,
வண்டியினின்று பெற்ற
விடுதலை வாழ்த்திற்றங்கே!

தன் ஏறு குதிரை மீது
தான் ஏறிக் குப்பன் செல்வான்,
மின்போல உடல் நெளித்து
விரைமான்போல் ஓடும் குட்டி,
பின்புறம் வண்டியில்லை
பெற்றேன் நான் விடுதலைதான்
என்றெண்ணி மகிழும்! ஓர் நாள்
ஏகிற்றுத் தாயின் அண்டை.

அம்மா நான் உரிமை பெற்றேன்.
உம்மட்டும் நானடைந்த
இன்னல்கள் நீங்கப் பெற்றேன்,
அம்மிசுண் டெலிமேல் ஏறி
அமிழ்த்தல்போல் என்னை வண்டி
இம் மண்ணில் இனி அமிழ்த்தா
தென்றது குதிரைக்குட்டி.

கடிவாளத்தால் கிழிந்த
கடைவாயில் குருதி யாறு
வந்திட எதிரில் நின்று
மகிழ்ந்திடும் குட்டி தன்னை,

உடைந்த உள்ளத்தால் நோக்கி
உரைத்தது; 'கிழித்தாய்' ஏஏ
அடிமையே உனைப் பிணித்த
ஆங்கில வண்டியில்லை.

வடக்குள குப்பன் உன்றன்
வன்முது கின்மேல் ஏறிக்
கடிவாளம் இறுக்கு கின்றான்
கருதினாய் இல்லை! வாயில்
வடிகின்ற குருதி காணாய்!
வலி உணர்கின்றாயில்லை
அடிமையை வியந்தாய், உன்றன்
அகத்தினில் இருளைச் சேர்த்தாய்.

வீழ்ந்தனை அடிமைச் சேற்றில்,
விடுதலை விழா மேற்கொண்டாய்,
ஆழ்ந்துபார் உன் நாடெங்கே?
அருங்கலை ஒழுக்க மெங்கே?
தாழ்ந்தது தாழ்ந் தெவனை நீபோய்த்
தாங்கிட ஒப்புகின்றாய்?
வாழ்ந்த நம் உரிமை வாழ்வை
நினைக்கவும் மறுக்கின்றாயா?

கடிவாளத்தை பிடிப்புக்கப்பால்,
கதைந்திடு மதமென்கின்ற
நெடுங்குன்றுக் கப்பால், சாதி
நிறைமுள்ளுக் காட்டுக்கப்பால்,
மடிவிலாக் கலை, சொல் பூக்கும்
மணிப்புனல் ஓடை தன்னை
உடையபுல் வெளியிலன்றோ
உன் முழுதுரிமை உண்டு?

என்று தாய்ப்பரி உரைத்தே
எதிரில் தன் குட்டி தன்னை
நன்றொரு முறையும் நோக்கி
நளிர்புனல் ஓடை தன்னை
மின்னு புல்வெளியை நெஞ்ச
வெளியினில் நோக்கி நோக்கித்
தன்னுயிர் விட்ட தங்கே
தன் குட்டிக் குரிமை காட்டி!

## வீட்டுக் கோழியும் காட்டுக் கோழியும்

வீட்டுக்கோழி

காலையில் எனக்குக் கம்பு போடுவர்,
காலையில் தவிடு பிசைந்து வைப்பர்.

இட்டிலி உண்கையில் என்னையும் அழைத்துப்
பிட்டுப் பிட்டுப் போட்டு மகிழ்வர்.
இரவில் எனக்கோர் இன்னல் வராமல்
ஒரு பெருங்கூடை கவிழ்ப்பார் வருபிணி
வராமல் வசம்பு நீர் வார்த்துக் கழுவுவர்.
என்னை வளர்ப்பவர் எனக்குச் செய்யும்
நன்மை நவிலத் தக்க தன்று.

காட்டுக்கோழி

உன்னால் அவர்க்கு நன்மை யில்லையா?

வீட்டுக்கோழி

முட்டை இடுவதற்கு மூலை யடைவேன்.
எதிர்பார்த்திருந்த என் வீட்டார்கள்
சட்டியை அடுப்பில் இட்டு நெய்விட்டு—உடன்
என்னைக் கூடையில் இட்டுக் கவிழ்ப்பர்,
பன்முறை கூடையைத் திறந்து பார்ப்பர்.
வெளிவரும் முட்டையை வெடுக்கென் றெடுத்தே
அடைசுட்டு உண்டு மகிழ்வர் அனைவரும்.

காட்டுக்கோழி

அடைக்காத்திடவும் முட்டைகள் அமைப்பரோ?

வீட்டுக்கோழி

ஒரு பெருங் கூடையில் உமியைப் பரப்பி
அதன்மேல் ஐந்தோ பத்தோ முட்டையை
அமைத்து மேல்எனை அமைத்து மூடுவர்;
இருபத் திரண்டு நாட்கள் அடைகாத்துக்
குஞ்சு வெளிப்பட நெஞ்சம் மகிழ்வேன்.
இதனிடை எனக்குத் தீனியும் இடுவர்,
குஞ்சு கண்டு நான்கொள்ளும் மகிழ்ச்சியைவிட
வளர்ப்பவர் கொள்ளும் மகிழ்ச்சியே பெரிது.

காட்டுக்கோழி

குஞ்சுகள் அவர்கட்கு என்ன கொடுக்கும்?

வீட்டுக்கோழி

பதினைந்து நாளில் என் பசுங்குஞ்சுகளில்
இது நன்று மற்றையது நன்றன்று
வாட்டம் பார்த்தே ஓட்டமாய் ஓடி
இரண்டு மூன்றைப் பற்றித்—தலையைப்
பனையிற் பாக்குக் காய்போல் திருகிப்
பிஞ்சுடம்பின் பஞ்சுமயிர் கிரைத்துக்
குருதி கொட்டக் கூறிட்ட சதையை

நெய்யொடு நெய்யாய் நீர்ப்பதம் எய்தச்
சொய் எனத் தாளித்துச் சூப்பென்று அருந்துவர்!
அப்போது நானோ அழுதுகொண்டிருப்பேன்.

காட்டுக்கோழி

வடக்கன் தெற்குவாழ் தமிழர்க்கு அள்ளிக்
கொடுப்பதாய்ச் சொல்லிக் குதிக்கின்றார்கள்
உன்போல் உன்போல்! உரைப்பது கேட்பாய்;
இங்குளார் உழைப்பின் பயனை யெல்லாம்
வடவர் அடியோடு விழுங்கி வாழ்பவர்;
அடிமைகள் தமிழர்கள் என்றே அறைபவர்;
இதனை எண்ணி அழுதிடும் தமிழரும்
முட்டைகள், குஞ்சுகள் முற்றும் இழக்கையில்
அழுதிடும் உன்னையே ஒப்பவர் ஆவார்.
வீட்டுக் கோழியே வீட்டுக் கோழியே
கேட்பேன் உன்னையோர் கேள்வி! உன்றன்
தாயகம் எது? அதைச் சாற்ற முடியுமா?

வீட்டுக்கோழி

சேலத்தி லிருந்து ஒசூர் செல்லும்
வழியில் அழகு வழங்குகின்ற ஓர்
ஈக்காடு வேய்ங்குழல் இசைத்தட்டு வைக்கும்
பூக்காட்டின் கீழ்ப்புதர் என் தாயகம்
என்றே என்றன் பாட்டி சொன்னதாய்
என் தாய் எனக்குச் சொல்லிய துண்டு.

காட்டுக்கோழி

ஆசை மலர்க்கொடி யூசல் ஆடி
அகமகிழ்ந்திருக்கும் என் அன்னை நாடும்,
அது தான்! இது கேள், உடனே பிறந்தோய்,
பூச்சி, புழுக்கள், பொன்னிற மணிகள்
உண்டு தன்மானத்துடன் சேவலின்
முன் மார்பு, கதிர் முகம் பார்க்கும் கண்ணாடி!
ஒளியை இறைக்கும் வாலின் சிறகுகள்
தரையிற் புரள்வது தனி ஒரு காட்சி!
பலவின் அடியில் இலவம் பஞ்சுமேல்
இட்ட முட்டையெலாம் பொறித்திட்ட
பெட்டை, மாம்பழ மேனிப் பிள்ளைகள்
யாழும் குழலும் இசைத்துச் சூழ
நரிகள் அஞ்சிப் பறக்கும் அங்கே!
கம்பு போட்டுக் கழுத்தை யறுக்கும்
வடக்கன் ஆட்சி போன்ற இடக்கு
நம்தாயகத்தில் நாம் கேட்டறியோம்,
ஆதலின் பற! நம் தாயகம் பெறவே.

வீட்டுக்கோழி

இறக்கை இருந்தும் பறக்க வகையிலேன்.

காட்டுக்கோழி

என்றன் முதுகில் ஏறு
துன்ப மில்லாத விடுதலை தோய்கவே.

## அதிட்டம் பார்ப்பானுக்கு!

கூட்டிய குப்பையில் தங்க மணியைப்
போட்டுப் போனான் மடைமைப் பெண்ணன்!

அப்பக் கத்தில் அலைந்து திரிந்து
குப்பை கிளறிய கோழியதை விழுங்கிற்று!
விலைக்கு விற்கப்பட்ட அக் கோழியைக்
கொலைக்குக் "கொண்டலையன்" வாங்கிச்
சமையல் அறையில் தனியே குந்தி,
அமிழ்த்திக் கொன்றே அரிந்த சதையைச்
சட்டியில் இட்டுத் தங்க மணியை
இடுப்பில் ஏற்றினான்! "தங்க மணியை"

அடைந்ததைப் பார்ப்பான் அதிர்ஷ்டம் என்பான்.
அதிட்டம் ஒப்பாத் தமிழன் அறிகுான்,
மடைமைமேல்வாய்த்த வெற்றி ஆதலால்
உடைமையை உடையனுக் காக்குவான் உடனே.

## அயல்மனை விரும்பியவன் பட்டபாடு

கண்ணான மனைவியிடம் திரைப்படம் பார்த்திடக்
கருதினேன் என்று புளுகிக்
கந்தனோ ஒரு மங்கை வரச் சொன்ன நள்ளிருள்
வரும்வரை அழகியதிரு

வண்ணா மலைத்திருக் குளப்படி வலக்கழிவில்
அமிழ்ந்தே பதுங்கி, நேரம்
ஆனபின், விரைவினில் போனதோர் போக்கிலே
ஆலமர வேர்த்தடுக்கப்,

புண்ணான காலையும் எண்ணாமல் முள்ளொன்று
பொத்ததும் வாங்காமல்மேல்,
புளியங்கிளையொன்று துளையிட்ட நெற்றியில்
போட்டகை போட்ட வண்ணம்,

வண்ணான் பெருங்கழுதை மேல் விழுந்துதையுண்டு
கோட்ட வாயில் சேர்ந்தனன்;

வள்ளென்ற தொருநாய், தன் உள்ளங் கலங்கினான்
வந்து வீழ்ந்தனன் வீட்டிலே.

## கழைக் கூத்தாடி

திடுதிடும் திடுதிடும் திடுதிடும் திடுதிடம்
திடுதிடும் திடுதிடும் திடுதிடும் திடுதிடம்
அஹஹ கும்பிட்றேன் அல்லாருக்கும்
அஹஹஹ வரிஞ்சலா அமர்ந்திருங்க!

மக்களெ பெத்த மகராசருங்க,
கண்ணால் பார்த்துக் காசு போடுங்க.
ஒருதுட்டு உங்கட்கொருவாய் வெத்லே,
எங்களுக்கதுதான் திங்கற சோறு!
மொதல் ஒரு வேலே, முழக்கடா மோளம்.
திடுதிடும் திடுதிடும் திடுதிடும் திடுதிடம்.

என்னடா தம்பி?
ஏன்டா அண்ணா!
இதோபார் தம்பி எலும்புக்கூடு.
சதையும் இல்லே சத்தும் இல்லே.

ஆமாம் திடுதிடும் அதற்குப் பேரென்னா?
அதன்பேர் தமிழ்நாடு!

சரிசரி திடுதிடும்!

இந்த எலும்பே எழுந்திருக்க வைக்கிறேன்;
செய்யி செய்யி பார்ப்போம் திடுதிடும்;
அமிஞ்ச எலும்பே ஆட வைக்கிறேன்;
செஞ்சி காட்டு திடுதிடும் திடுதிடும்;
ஓய்ஞ்ச நாட்டிலே உசுருண்டாக்றேன்
ஆக்கிக் காட்டடா அண்ணே திடுதிடும்!
அடிமோளத்தெ! "திடுதிடும் திடும்"
இந்த எலும்பே இப்படி வைக்கிறேன்.

வைச்சா உயிரா வந்திடும்? திடுதிடும்!
மருத்து செய்யனும் தெரிஞ்சுதா ஒனக்கு?

சரி செய் திடுதிடும்!
இதோ பார் மாம்பழம் இதை நான் புழியறேன்.
புழி புழி திடுதிடும்!

இது ரஸ்தாளி இதையும் புழியறேன்.
புழி திடும் திடுதிடும்!

பலாச்சுளை புழியறேன்
திடுதிடும் புழிபுழி!

தேனும் சேக்கறேன், பாலும் சேக்கறேன்,
எளநீர் வழுக்கே இட்டுக் கொழைக்றேன்.
இடித்த தினைமா இட்டுப் பெசையறேன்,
பொடித்த பருப்பும் போட்டுக் கலக்றேன்,
எல்லாத் தையுமே இளஞ்சூடாக்கி,
பல்லாய் நிறையப் பக்குவப் படுத்தினேன்.

ஆஹா ஆஹா, அண்ணே அண்ணே!
இந்த மருந்துக் கென்னா பேரு?

உள்ளே தொட்டால் உசிரில் இனிக்கும்
தென்னு தமிழ் தம்பி தென்னுதமிழ் இதுதான்!
இந்த மருந்தே எலும்புக் கூட்டில்
தடவுறேன் தம்பி அடி மோளத்தை!
திடுதிடும் திடுதிடும் திடுதிடும் திடுதிடும்

சிரித்தது பாரடா செந்தமிழ்க் கூடு!
விரிந்தது பாரடா அழிந்த நம்நாடு!
பாடுது பாரடா பைந்தமிழ் நாடு!
முழிச்சிப் பாத்து முறுக்குது மீசையை!
எதிரி மேலே எண்ணம் கொள்ளுது!
சொத்தைக் காக்கக் கத்தியைத் தூக்குது;
தமிழில் நனைந்த தமிழ்நாடு பாத்தியா;
ஆடுது பாத்தியா அழகு நாடு!

தாயி மாரே தகப்ப மாரே
மாய மில்லை, மந்திர மில்லே,
கருத்து வேணும்! நம்ப
வருத்தம் நீங்கத் தேடனும் வழியே!

## நல்ல தொண்டு

நகர்ப்புற ஓடையில் குளித்து, நகரத்துத்
தமிழர் இட்ட கூழ் அமிழ்தென மகிழ்ந்து.
சிராப்பள்ளி ஊரில் இராப்பள்ளி நடத்தும்
தார்க்கோல் தண்டன் வீட்டுத் திண்ணையில்
இருந்த அடிகள் நம்பியார் எதிரில்
திருந்தாத் திருமலை செயல்கண் டிருந்தார்.

சிறுகுடிற் கதவு திறந்திருந்தது
குறுமதிக் குப்புதன், கொண்டான் இருக்கவும்
தெருவில் சிரிப்புடன் சென்ற சினனை

வரலாம் என்று வலக்கை அசைத்தாள்,
சீனன் வந்து சேர்ந்தான் பின்னொடு

திருமலை வந்து அறிந்தான்,
திருமலை திகைத்து நின்றான்! திரும்பினான்!
தெருவில் வந்தான், சீனனைக் கொல்வதா?
குறைமதிக் குப்பைக் கொன்று போடுவதா?
அல்ல திரண்டு பேரையும் அழிப்பதா?

தான் தொலைகுவதா? எதுதான் நல்லது?
அடிகளாரிடம் அனைத்தும் கூறினான்.
தானே சாதல் நன்றென்று சாற்றினான்.
இருளை நினைக்க வில்லையா என்று
நம்பியார் கேட்டார்; இல்லை என நவின்றான்.
சாவது திண்ணமா என்று சாற்றிய
அடிகள்பால், ஆம் ஆம் என்றான் திருமலை.
அடிகள் நம்பியார் அறிவிக்கின்றார்:
பூண்ட பழியைநீ புகழிற் புதைப்பாய்
தமிழுக்குத் தொண்டு செய்து சாவு.

கோடரிக் காம்பர் இடுகாடு கொண்டுபோம்
விழாவொன்று வேப்ப மரத் தெரு
முனையில் நடந்தது. மாலை மூன்று
மணிக்கெல்லாம் கட்டை இடுகாடு வந்தது;
அங்குக் கிடந்த திருமலை உடம்பையும்
அமைத்த குழியில் இட்டனர்
தமிழ் வாழ் கென்றனர் ஆங்குப் பலரே;

## இறைப்பது எளிது பொறுக்குவது அரிது!

என்கணக்கன் எல்லப்பன் இல்லா நேரம்
இரிசப்பன் என்னிடத்தில் வந்து குத்தி
உன்கணக்கன் பெரும்பொய்யன் என்று சொன்னான்.
உண்மையிலே அவன் தீயன் என்று சொன்னான்.
அன்னவனை இன்றைக்கே நீக்க வேண்டும்.
அன்பினால் இதைஉன்பால் சொல்லு கின்றேன்
என்றுரைத்தான். இரிசப்பா எனக்கணக்கன்
ஏன் தீயன்?—உரையப்பா என்றுகேட்டான்.

தேரிலும் நான் அறிந்ததுண்டு பிறர்வா யாலும்
நிறைய நான்கேட்ட துண்டு, பொய்யா சொல்வேன்?
பாரில்அவ னைப்போலே முடிச்சு மாறிப்
பையனைநாம் பார்த்திடவும் முடியா தென்றான்.
சீரிய என் எல்லப்பன் தீயன் ஆன
சேதியைநான் இன்றுதான் கேட்கலானேன்

ஏரோட்டப் போகாமல் இரிசப் பன்தான்
எல்லப்பன் மேற்பழியை அடுக்கு கின்றான்.

என்நலத்துக் குழைப்பதாய்ச் சொல்லிச் சொல்லி,
இயல்புடையார், நண்புடையார், சொந்தக் காரர்,
தந்நலத்தை எண்ணிஎனை ஏய்த்துச் சென்றார்.
தனிஓர் ஆள் எல்லப்பன் துணையாய் நின்றான்;
அன்னவனும் போய்விட்டால் நிலைமை என்ன?
ஆம்! எனினும், அன்புள்ள இரிசப்பா நீ
சொன்னபடி எல்லனை நான் நீக்கி விட்டேன்,
தோதாய் நீ வேலைபார் என்று சொல்லி.

போய்வா என் றேஉரைத்தேன்! இரிசன் போனான்,
புதன்கிழமை மாலையிலே சாலை ஓரம்,
நேயனாம் கணக்கனிடம் இரிசன் என்ற
நெருப்புமனக் கொடும்பாவி நிகழ்த்து கின்றான்,
"நாயேடா எல்லப்பா உழைத்தொ லைத்தேன்
நான்தாண்டா இலிக்கணக்கன்; என்வி ருப்பம்
நீயென் றாலும்அது தென்றல்" என்றான்.
செவிமடுத்தேன் அவன்சொல்லை மறைந்து நின்றே.

அலுவலகம் இரிசனார் அதிகா ரத்தில்
அடங்கிற்று, நாளும்உள் ளூரில் இல்லை.
தொலைநோக்கிச் சென்றுவிட்ட தாய் நினைத்தான்,
தொடங்கினார் காரியத்தை இரிச னாரும்.
விலைஏறப் பெற்ற என் மேசை யைத்தன்
வீட்டுக்கு வண்டியிலேஏற்றிச் சென்றான்;
குலைகுலையாய்ப் பழந்தொங்கும் மாம ரத்தைக்
கொலைகாரன் சூளைக்கு விற்று விட்டான்.

வெட்டுமுன்னே குறுக்கிட்டான், வெட்டா வண்ணம்
வெடுக்கென்று கோடரியைப் பறித்துக் காத்தேன்;
பெட்டியிலே இருப்பென்ன என்று பார்த்தேன்,
பெரிய தொகை காணவில்லை. என்ன என்றேன்.
எட்டுநூ றெடுத்துள்ளேன் என்பற் றாக
எழுதிவைத்தேன் பார்க்கணக்கை என்று சொன்னான்.
இட்டார்கள் சிறையினிலே இரிச னாரை
எல்லப்பனைக்கெஞ்ச யாரால் ஆகும்?

## திருவாரூர்த் தேர்

திருவாரூர்த் தேர் திருவாரூர்த் தேரென்று
தெருவாரும் ஊராரும் சேர்ந்த—திருநாட்டார்
நெல்லுப் பொரிபோற் குதித்தார்கள், நீள் அன்பால்
கல்லுப்பாய் நெஞ்சு கரைந்தார்கள்! —செல்வர்கள்

பின்னாள் புகைவண்டிச் சீட்டுப் பெறும் பொருட்டு
முன்னாள் பதிவை முடித்தார்கள் – நன்செய்
நிலத்தை அடகு வைத்து, நீள்வெள்ளிக் கூசா,
புலித்தோலாற் கைப்பெட்டி, போர்வை —விலை கொட்டி

வாங்கினார்! வாடகையாம் உந்து வண்டிக் கச்சாரம்
பாங்காய் அளித்தார்கள் பற்பலர்!—நீங்கா
உறவினரை ஓடி அழைத்தார்கள் மற்றும்
பிறரிடம் பேசிக் களித்தார்.
—நிறையப்

பொரிவிளங்காய் உண்டையும் போளியும் செய்தே
ஒரு பெரிய பெட்டியின் உள்ளே—'இரும்' என்றார்.
நல்லவகை என்னுருண்டை நானூறு! கண்ணான
வெல்லக் கொழுக்கட்டை, வேர்க்கடலை—கொல்லிமலை
வாழைச் சுழியன், வடை, பொரிமா, உப்புமா
பேழை பிதுங்க எருக்கங்காய்,—தாழாமல்
வேகையிலே நெய்மணக்கும்; வெந்தபின் எள்மணக்கும்
பாகத்துக் கைமுறுக்கும் பண்ணியே,
—தோகையரும்

ஆடவரும், பானை, சட்டி பெட்டி, அழகுசால்
தேடி அவற்றினிலே சேர்த்திடுவார்—கூடத்தில்
குந்தியே கையோடு கொண்டு போகும் சிப்பம்
ஐந்தாபத் தாஎன்றவை எண்ணிச்—சிந்தாமல்
பொட்டுக் கடலை, பொரி, போம்போது தின்னவென்றே
எட்டுத் தகரத்தில் ஏற்றினார்—நட்டபடி!
தேருக்குச் சென்று திரும்புகையில் என்னென்ன
ஊருக்கு வாங்கி வருவதென்றே—காரியத்தை
எண்ணி எழுதி முடிக்கையிலே, அங்கிருந்த
பெண்ணாள் துடைப்பமென்பாள். பேர்த்தியோ
—மண்சட்டி

என்பாள். மருகி வடிதட்டு! வீட்டுப்பெண்
சின்னக் கரண்டி என்பாள். சீப்பென்பாள்
—முன்னின்ற

மூத்த பெண் முத்து வளையல்என்பாள்! பார்த்திருந்த
காத்தமுத்து நீலக்கண்ணாடி என்பான்—கோத்த
மணி நடுவில் குண்டு மணி கோத்த—நல்ல
அணிமாலை வேண்டுமென்பாள், அண்ணி, —துணியில்லை

பட்டுக் கரைவேட்டி பார்த்தெடுக்க வேண்டுமென்று
சொட்டைத் தலையப்பன் சொல்லிநிற்பான். —கிட்டக்
கமலாலை யத்துக் கடையிலுள்ள சீட்டி
எமலோகம் ஏகிடினும் சாயம் கமராது,
வாங்கத்தான் என்றுமணப் பெண்ணாள் வாய்திறப்பாள்;
பூங்கத்தா ழைநிறத்தில் புள்ளிவைத்த—பாங்கான
சேலைஒன்று கேட்டுநிற்பாள் தேன்மொழியாள்,

ஓடு தடுக்கொன்றே ஒன்றென் றாள்—வேலை
முடிந்தது பட்டியல், முன்னிரவும் போக
விடிந்தது போழ்து; விரைவாய்—முடிந்திருந்த
மாடவிழ்த்துக் கட்டிய வண்டிமேல் கூண்டு கட்டி
மேடுபட வைக்கோலை உட்பரப்பி—மூடிய
சாக்குமெத்தை மேலே சரியாய் இருபதுபேர்
பாக்கடைத்த பையாக உள்ளடைவார்;—ஏர்க்காலில்
ஒட்டுவானோடொருவன் ஒட்டுவான் இம் முனையில்

பாட்டன் படிக்கட்டைப் பார்த்தேறி, வேட்டி
ஒருகையால்பற்றி, ஒருதொடையால் குந்தி,
சொரிசிரங்கும் தொப்பையுமாய்த் தொங்கி—இருப்பார்.
பெரியவ ரோடு பிறரும் அமர
உரியபெட்டி பேழையும் உய்க்க—விரிந்த
இடம் வேண்டும் என்றே இரண்டாள்கள் ஏங்கிக்
குடம், பானை, பெட்டி, குவளை—அடங்கிய
மூட்டைகளை வண்டிமேல் போட்டு, முழுசாக்கை
நீட்டுப் படுக்கைகளை வண்டியின்கீழ்—நீட்டுக்
கயிற்றினால் தொங்கவிட்டுக் கைப்பெட்டி எல்லாம்
குயில் மாதர் தம்மடிமேல் குந்த—முயற்சி செய்து
வெற்றிலை பாக்குப்பெட்டி, வெல்லம் ஒரு துணியில்
சுற்றி,வீட் டம்மா சுமந்திடவே—ஒற்றிக்
குழந்தைக்குக் கூண்டிலே ஏணைகட்டிக் கால்கள்
முழந்தொங்க விட்டு, முணுகி—அழும்பிள்ளை
பாட்டி மடியில் பதுங்கவைத்து, வண்டியினை
ஓட்டென்று சொல்லவே ஓடுமாம் மாட்டுவண்டி!

ஒன் றல்ல நூறல்ல ஓரா யிரமிருக்கும்
இன் றல்ல நேற்றல்ல எவ்வாண்டும்—சென்றவண்டி
மாட்டுவண்டி மட்டுமல்ல. மட்டக் குதிரைவண்டி
ஒட்டுவண்டி ஆயிரமாம்! உள்ளங்கால்—நீட்டுமுள்ளால்
செங்குருதி பாயச் 'சிவசிவா' என்றுரைத்தே
அங்கு நடப்பார் அரைக்கோடி!—திங்கள் இன்று

காலைப் புகைவண்டி என்று கலைந்தோடி
மூலை முடுக்கெல்லாம் முட்டவே—நாலுதிக்கும்
கொள்ளாத மக்கள் நிலையத்திற் கூடியே
உள்ளே புகமுயன்ற ஓர்காட்சி—விள்ளரிது!

கண்ட வண்டி நிற்கக் கதவு திறக்குமுன்னே,
பெண்டாட்டி பிள்ளையின் கைப்பற்றிக்—குண்டானை
ஓர்கையில் ஏந்தியே உட்செல்லப் பார்ப்பாரை
ஆர் தடுப்பார்? அங்கே தடுத்தாலும்—ஆர்கேட்பார்?

உள்ளிருக்கும் கூட்டம் இறங்கும்; அதேநேரம்
துள்ளி ஒருகூட்டம் தொடர்ந்தேறும்;—வள்வள்
இரைச்சல் ஒருபக்கம்! இடிபட்டு நாய்போல்
குரைச்சல் ஒருபக்கம்! கூட்ட—நெருக்கடியில்

எள்ளைப்போட் டாலும்எள் கீழே விழாதானால்
எள்ளிடு வார்நெருங்கக் கூட்டத்தில்—எள்ளளவும்
இல்லை இடம்! புகை வண்டி நிலையமே
இல்லை! தமிழ்நா டிருந்தது! -தொல்லை
இருந்தது! வண்டி நிலையமெல்லாம்—இவ்வா
றிருந்தது! தேருரை எண்ணித் தெரிந்தமட்டும்
சென்ற புகைவண்டி ஆயிரம் தேறுமன்றோ?
ஒன்றையொன்று தள்ளியே ஓடிய—மின்வண்டி
ஆயிரத்துக் கப்பன்! அதற்கப்பன் காயும் வெயில்
தாயிட்ட செவ்வெண்ணெய் தான்சுழல,—ஓயாமல்
மேனி எரிக்க, வியர்வை அதைப்போய் நனைக்க
கால்நடையாய்ச் செல்வார் கணக்கு!

(அகவல்)

கிழிந்த ஆடையும், கேடற்ற உள்ளமும்,
அழிந்து போவார்மேல் அருளைப் பொழியும்
இரண்டு கண்களும், இவைபோற் பிறவும்
திரண்ட ஒன்றைச் 'செல்லப்பர்' என்பர்,
இல்லப்பராய்ப்பின் எவர்க்கும் நலம் செயச்
செல்லப்பர் ஆகித் திருவாரூரில் ஓர்
ஆலின் அடியில் அமர்ந்திருந்தார்,
தேருக்காகச் செந்தமிழ் நாடே
ஊரில் இறங்கும் ஓர் உருக்கக் காட்சியை
'அப்பர்' காண்பார், 'ஐயோ' என்பார்,
புளிஇலை இடத்தில் நெளியும் பெருந்தொகைப்
புழுக்கள் போலப் புகும்பெரு மக்களில்
ஒருவர்மேல் ஒருவர் விழுந்தும் எழுந்தும்
உருண்டும் புரண்டும் ஒட்டியும் நெட்டியும்

வெருண்டும் வெகுண்டும் அடித்தும் கடித்தும்
செல்வதுதானா திருவிழா? என்றார்.
ஆலை உருளையில் அகப்படு கரும்பெனச்
செக்கில் எள்ளெனக் கிழவியர் சிற்சிலர்
அளவிலா நெருக்கால் அடிபட்டு மிதிபட்டு
'கொள கொள' வென்று குருதிபாய்த் தோலாய்க்
கிடப்பதும், உயிர்தான் துடிப்பதும் அறியாது
"தேர்தேர்" என்று மேற்சொல்லுகின்றனர்.

திருமணம் முடித்துச் சிலநாள் சென்றும்
அயலார் விரல்பட் டறியா ஒருபெண்,
திண்டாடி வேறொரு சேயுடன் செல்கையில்,
பெண்டாட்டி எங்கென்று பின்னிருந் தொருவன்
கூவி மற்றொரு கோதையைத் தொட்டதால்
'பாவி' என்றே அவள் பளீரென அறைவாள்!

"தேர் எங்கே?" என்று கேட்ட சேயிழையைப்
'பார் அதோ' என்று பரிந்து விரைந்து

தோளில் தூக்கினான்! தோகை குதித்தாள்.
குதித்த இடமும் மற்றொரு குரிசிலின்
தோளே! தோகை தொத்திய தோளும்
அயலான் தோளே! அல்வாறே அவள்
தோளே வழியாய்த் தொத்தி நடந்து
'மாமா', 'மாமா', என்றே அலறி,
ஆமைபோல் கைக்குள் மார்பை அடக்கி,
வெற்பைத் தாவும் பொற்புறு புள்ளெனக்
சுற்பைக் காக்கச் சாக்காடு காண்பாள்!

மலையினின்று மளமள வென்று
சரியும் சரிவின் நடுவிற் கொடியைப்
பிடுங்குவான் போலப் பேதை ஒருத்தியை,
மக்கள் நெருக்கில் சிக்காது காக்க
அணைத்தபடி சென்ற அருமைக் கணவன்,
சிறிது தொலைவு சென்று திரும்பி
அவள் முகம் கண்டான், ஆயினும் அவளின்
இடுப்புக் குழந்தையின் தலையைக் காணான்!
அன்னையர் அழுவார், தந்தையர் அழுவார்,
கன்னியர் அழுவார், காளையர் அழுவார்.
ஏன்என்று கேட்பார் எவருமே இல்லை!

தள்ளலும் இடித்தலும் தளரலும் உளரலும்
குறைந்த பாடில்லை எங்கும் குறைபாடு.
நிறைபாடாகும் அந்நேரம் ''டும்! டும்''!
'விலகு வில'லென ஓசை கேட்டது
கரையிலா தோடும் மக்கள் காட்டாறு
இப்புறம் அப்புறம் ஒதுங்கி நடுப்புறம்
வழிவிட, மடத்தம்பிரானார் சிவிகையில்
அழகொடு வரச் செல்லப்பர் கண்டு
கண்ணில் களிப்புப் பொங்க, ''அடிகளே,
கண்டீரோ மக்கள் கலக்கம்? நெருக்கம்
நீக்க நீவிர் என்ன ஏற்பாடு
செய்தீர்?'' என்று செப்பிய அளவில்—
''ஆரூர்ப் பெருமான் ஆற்றல் விளக்கம்
இது'' என்றியம்பி அருளினார் தம்பிரானார்!

''ஐயன் ஆற்றலை விளக்க மக்களை
நைய விடுவதா? நம் செயல் அன்று;
அல்லல் புரிவதும் அவன் அருள் தானா?
அறவுளார் இதனை அல்லல் என்றார்,
சாற்றுவதென்ன? தவம் என்று சொல்வார்.
உருவ வணக்கமாம் ஒழுக்கக் கேட்டில்
தவமும் தோன்றா—உருவில் தங்கி
எண்ணுவார் நெஞ்சில் தன்னுருக் காட்டித்
தண்ணருள் புரிவது சதாசிவன் வேலை;

அப்படி யிருக்க மக்கள் ஐயோ
ஆரூர் வருவதேன்? அல்லல் அடைவதேன்?

என்று செல்லப்பர் இயம்பி, மக்களை
நோக்கிக் கை தூக்கு உரக்க நுவலுவார்;
''மக்களே, மக்களே! திருவாரூர்க்கு
வருதல் வேண்டா! வாழ்ந்திருக்கின்ற
அங்கங் கிருந்தே அப்பனை எண்ணுவீர்,
அகத்தில் அப்பனைக் கண்டு தொழுவீர்,
இங்குவந் திப்படி இன்னல் எய்தாதீர்.
ஒத்துத் தம்பிரான் உங்களை நன்றாய்ப்
பத்தாயிரம் ஆண்டு சிவத்தில் பயிற்றினார்!
ஆரூர் அப்பனை அங்கிருந்தபடி
தேரோடு நெஞ்சில் சேர்க்கும் ஓர் ஆற்றலைப்
பெற்றிட வில்லை என்றால்
வெற்று வெடிக்கஞ்சிய நாள்கள் வீணே!

## நீலவண்ணன் புறப்பாடு

நீலவண்ணன் நிலவிற் சென்றான்

நீலவண்ணன் நல்ல நிலவில்
சாலையில் தனியே செல்லும்போது
தன்மான மில்லாத் தமிழன் ஒருவனை,
'என் மாமா எனைத் தெரியுமா' என்றான்
'எங்கோ பார்த்ததாய் எனக்கு நினைவுதான்!
உங்கள் முகவரி உரைப்பீர்' என்றான்.
இப்படி இளிச்சவாய்த் தமிழன் கேட்கவே,
'முற்பட உங்கள் முகவரி சொல்வீர்
என்றன் முகவரி பின்னர் இயம்புவேன்'
என்று நீல வண்ணன் இயம்பினான்.

தமிழன் தன் முகவரி சாற்றுவான்

'இந்தத் திரிச்சிதான் இ இ இ இ இ இ
இந்தத் தெருவே இ இ இ இ இ இ
அதோ தெரிகின்றதே அது என் வீடு தான்!
என்றன் மகளை மணந்தவன் எங்கோ
சென்றவன் பத்தாண்டு சென்றதும் வரவே
யில்லை! என்ன செய்து தொலைவேன்!
நேற்றுச் சோதிடம் கேட்க நேர்ந்தது;
'மருமகன் ஊருக்கு வந்துவிட்டான்.
வீடு தெரியாது அலைகின்றான், இனித்
தெரிந்து கொள்வான் வீட்டைச் சேருவான்'
என்று நன்றாய் இயம்பினார். ஆதலால்
என்றன் மருமகனை எதிர்கொண்டழைக்கவே
இப்படிக் கிளம்பினேன்' என்று முடித்தான்.

நீலவண்ணன் திடீர்ப் புளுகு

"உங்கள் மருமகன், உங்கள் மருமகன்,
நான்தான் மாமா, நான் தான் மாமா
வேறு யார் மாமா? வேறு யார் மாமா?
என் கண்ணீரும் உள்ளே இழுத்துக்
கொண்டது மாமா! தொண்டையும் அடைத்துக்
கொண்டது மாமா கூ கூ என்று, நான்,
அழவும் முடியவில்லை, மாமா,
தொடவும் முடியவில்லை, தொட்டுநான்
கட்டிப்புரண்டு கழுதையைப் போல
வெட்டிக்கு அலறவும் விலாவும், கையும்,
இடந்தரவில்லை, என்றன் மாமா
நடந்ததை மறந்து விடுவது நல்லது.
நானே கொடுமையாய் நடந்திருந்தாலும்
ஏனோ அதையெல்லாம் இழுக்க வேண்டும்?
மகளைப் பார்க்க வேண்டும் மாமா,
மகளைக் காட்டவேண்டும் மாமா,
வாரும் மாமா நிற்கலாமா"
என்று நீலவண்ணன் துடிக்கவே,
தமிழன் தடதடா தடதடா என்று
சவாரிக் குதிரைப்போல் தன் மருமகனோடும்
ஓடினான். ஓடி மகளைக் கூப்பிட்டுப்
"பாப்பா பார் உன் பல்லாய் நெய்யை!
இந்தா உன்றன் எள்ளடை உண்பாய்!
போடு சாப்பாட்டைப்! பொட்டணத்தை அவிழ்!
கைத் தட்டினிலே, கணிசமாய் வை!
பாக்கை நீயே கொடு! போ! துன்பம்
பச்சைப் புறாவாய்ப் பறந்து விட்டது!
மீச்சமெல்லாம் விடிந்தால் பேசலாம்."
என்று தமிழன் இயம்பினான்! தமிழ் மகள்,
விரைவில் அனைத்தையும் முடித்து வீட்டின்
தெருப்புறத்தில் தெற்குப் பார்த்த
சன்னல் அறைக்குள் இன்பம் நுகர்ந்தாள்.

குறிப்பு :

(நீலவண்ணன் நிகழ்த்திய வண்ணமே
தமிழன் தனது முகவரி தந்தான்.
முகவரி மட்டுமா? முன்வரி பின்வரி
அனைத்தையும் அடுக்கினான்! — நீலவண்ணனை
உன்றன் முகவரி தன்னில் ஒருதுளி
கிளத்துவாய் என்று கேட்டதுண்டா?
இல்லவே இல்லை. இட்டுக் கொண்டுபோய்
மகளோடு சேர்த்த மடச்சாம்பிராணி
அவன் யார் என்பதை நன்றாய் அறிய

எண்ணியதுண்டா? இல்லவே யில்லை!)
நீலவண்ணனோ, நீளக் கூந்தலை
விழிக் கெண்டைகளைக் கிளிப்பேச்சுக் காரியைப்
பெண்டாளுவதோர் பெருநிலை பெற்றான்.
மறுநாள் மாமனார் பெட்டிச் சாவியைக்
கைப்பற்றலானான்; கடைசியாக
தமிழன் வீட்டின் தனி அதிகாரியும்
ஆனான். ஐந்தாறு திங்களும் ஆயின!
ஒருநாள் நடுப்பகல் ஒரு மணிக்குக்
குளிக்கும் நீலவண்ணனுக்குக் கோதை
முதுகு தேய்த்துக் கொண்டிருக்கையில்,
இலங்கையினின்று முத்தன் வந்து
முன்கட்டில் நின்றபடியே பின்கட்டில்
வண்ணன் மனைவியைக் கண்டு கொதித்தான்;
'யாரடா நீ' என்று ஓர் அதட்டு அதட்டினான்.
'தமிழ் மகளே உன் சாயம் வெளுத்ததா?'
என்று சொல்லி எரிந்து நின்றான்.

அவள் அவனைப் பார்த்தாள்

அப்போது அழகோடு கணவனைப் பார்த்த
தமிழ் மகள், தனது தடித்தனத்தை
எண்ணினாள், நடுங்கினாள்! அதற்குள் எதிரில்

நீலவண்ணன் மூக்கு உடைந்தது

நின்ற நீலவண்ணன் மூக்கில்
முத்தன் குத்தினான்; ஒருகுத்துக் கொளகொள
என்று குழைந்தது; நீலன் மூஞ்சி
மூக்கிருந்த இடத்தில் நீலனுக்குச்
செந்நீர் கிணறு திடிரென்று திறந்தது.

அதற்குள் தந்தையும் அங்கு வந்தான்

தமிழ்மகள் தந்தையும் வந்து, முத்தனைக்
கண்டான்! கண்ணை நாணம் மறைத்தது.
'ஏமாற்றினாயே நாயே' என்று
நீலவண்ணனை நோக்கி நிகழ்த்தினான்.
'என் மகள் எங்கே எங்கே?' என்றான்.
கிளிமகள் இல்லை; கிணற்றின் அண்டையில்
துணிகள் துவைக்கும் கல்லும் இல்லை.
'மகளே மகளே என்று கிணற்றை
எட்டிப் பார்த்தான்; எழிலுறு கூந்தலே
மிதந்தது! தாவணி, பூவாகி மிதந்தன!
'இறந்தாள் என் கிளி, இறந்தாள் என் மகள்,
இவனால் இறந்தாள்' என்று கூவினான்.

முத்தன் முடுகு

நீல வண்ணன் நெட்டைக் கழுத்தைப்
பிடித்திருந்த முத்தன் திடீரென்று
கிணற்றில் பாய்ந்து, கிளியைத் தூக்கி
மேலே வந்தான் மெல்லியை நோக்கினான்.
சாகவில்லை என்று கண்டான்; தடாலென்று
கீழே அடித்தான் உடம்பு கிழிந்தது;
தொலைந்தாள் என்று நீலனைத் தொட்டான்.

நீலவண்ணன் அலறல்

'ஒன்று கேளுங்கள்! ஒன்று கேளுங்கள்!
ஒன்றைக் கேட்டபின் கொன்று போடுங்கள்!'
என்று கைகளை ஏந்தினான் நீலன்,

நீலன் சொன்னதென்ன?

'குற்றவாளி, நான் குற்றவாளி!
ஆயினும் என்னை அடிப்பது தவறு;
காரணம் நானோ கன்னையர் மகன்;
பார்ப்பான்; என்னை ஒறுப்பது பாவம்.'

தந்தை கும்பிட்டான்

என்றே இயம்பக் கேட்ட தந்தை
சாமி நீங்களா? சாமி நீங்களா?
என்று கும்பிடக் கையை எடுக்குமுன்,
முத்தன் ஒன்று வைத்தான் மாமனை,
மூலையில் வீழ்ந்தான் முட்டாள் மாமன்.
நீலவண்ணன் நின்றா இருப்பான்?

நீலவண்ணன் ஓட்டம்

ஓடினான், ஓடினான், துரத்தத் துரத்த
ஓடினான், ஓடினான், ஓடினான் மறைந்தான்.

பாண்டி நாட்டில்

சேரன், பாண்டி நாடு புகுவதாய்
வீரன் ஒருவன் வந்து விளம்பினான்.
அதனைப் பாண்டிய மன்னன் கேட்டதும்,
'வீட்டுக்கொருத்தன் படைவீடு சேர்க,
நாட்டுக்கு வருவதோர் நலிவு தீர்க்க'
என்று கட்டாய ஆணை இசைந்தான்.

பாண்டியன் பாசறை

பாண்டி நாடே படை வீடானது;
அங்கங் குள்ள மங்கையர் அனைவரும்
பொன்நிகர் கணவரைப் போருக்கனுப்பி

கல்நிகர் மனமும் கரைய அழுதனர்;
மீன்நிகர் கண்களில் நீரைப் பெருக்கினர்.

### கணவரை போருக்கு அனுப்பிய தெண்டிரை

தேன்நிகர் சொல்லால், தெண்டிரை என்பவள்
ஆளனை அறப்போர்க்கு அனுப்புகின்றவள்.
'வெற்றி மாலையோடு மீளுக அல்லது
பெற்ற புகழுடல் என்னைப் பேணுக'
என்று கூறி வாளை எடுத்து
நன்று தழுவி நடையழகு பார்த்தாள்.

### தெண்டிரைப் பிரிவைப் பொருள்

ஆயினும் அன்னவன் அகன்றதால், பிரிவு
நோயினால் நுண்ணிடை மளுக்கென்று முறியப்
பஞ்சணை ஏறிப் படுத்தவள், படுத்தவள்.

### தெண்டிரை மகன்

அவள் மகன். ஒருபுறம் அழுதுகொண்டிருந்தான்.
பசி பசி என்று பகர்ந்தது வயிறு,
கூவி அழுத ஓசை கேட்டொரு
முக்காடிட்ட கிழவி முன்வந்து
பக்கத்திலிருந்து வேடிக்கை பார்த்தாள்.
பையனின் அழுகையோ பஞ்சணை தன்னைக்
குலுக்கிய தாலே குப்புறக் கிடந்த
அன்னை தலை நிமிர்ந்து 'என்ன வேண்டும்?
சோறும் கறியும் சூடாறும் முன்னம்
போய் நீ உண்பாய்' என்று புகன்றாள்.
அழுத பையன் அங்கே செல்லுமுன்.
கிழவி ஓடிக் கிடைத்தவை அனைத்தையும்
பானையோடு சட்டியோடு கொல்லைப் பக்கம்
திருடிச் சென்றாள்! சிறிய பிள்ளையோ
சிறிது நேரம் சென்ற பின் வந்து
தேடினான் சிறிதும் அங்கே இல்லை.
வாடினான் மயங்கி வீழ்ந்தான், இறந்தான்.

### பஞ்சணைப் பாவை நிலை

பஞ்சணைப் பாவையின் நெஞ்சமோ அறையில்
காதற் பாட்டுப் பாடியிருந்தது.
பையன் இறந்ததும் பதைத்ததும் தமிழ்மகள்
அறியவே இல்லை. இந்த அழகில்
தமிழ்மகள் தன்னைப் பெற்ற தாயார்
அங்கு வந்தாள். அவள் நிலை அறிந்தாள்
பையனைத் தேடினாள்; கொல்லையிற் பார்த்தாள்;
இறந்து கிடந்த பேரனைக் கண்டதும்

அலறினாள்; 'அடி என் மகளே ஓடிவா'
என்று கூவினாள். ஏந்திழை கேட்டாள்.

### தமிழ்மகள் பிணத்தைக் கண்டாள்

ஓடிவந்தாள்! வாடிய மாலையை
அள்ளி அணைத்துக் கூவி அழுது.
பிள்ளையைத் தரையில் போட்டுப் பின்புறக்
கொல்லை வழியாய்க் குடுகுடு வென்றே
சென்று பார்வையை நாற்புறம் செலுத்தினாள்,
முக்காட்டுக் கிழவியும் செக்கெனப் பருத்த
பார்ப்பனன் ஒருவனும் பலா இலை தைத்ததை
விரித்துச் சோற்றில் குழம்பை விட்டுப்
பிசைவதும் மிசைவதும் மாக இருக்கையில்,
கண்டு கடிதில் நெருங்கிக் காலால்

### நீலன் மாற்றுடை கழன்றது

மண்டையில் உதைக்கையில் நீலவண்ணன்
தன்னுருக் காட்டித் தரையில் வீழ்ந்தனன்.
அன்னவன் சொன்ன தென்ன வென்றால்.
'பசிக்குச் சோற்றுப் பானை திருடினேன்
நசுக்கி என்னைக் கொல்லுதல் நல்லதா?
நானொரு பார்ப்பனன்? நானொரு பார்ப்பனன்'
என்றான். மற்றொரு பார்ப்பனன், இஞ்சு
தின்ற குரங்கு போல் இருந்தான் அங்கே.
குழந்தை உண்ணும் சோற்றைக் கிழவிபோல்
வந்திது திருடியே நீலவண்ணனால்
குழந்தை இறந்த செய்தி கூறவே
முத்தன் காதிற் பட்டது, முத்தன்
மன்னன் காதில் மாட்டினான்! மன்னன்
கள்வனை விடாதீர் என்று கழன்றான்.
அந்நேரத்தில் அரசனும் எதிரியும்
சண்டை நிறுத்தி தம்மில் ஒத்தனர்!
தமிழே தமிழர் தாய்மொழி என்றும்
தமிழே தனிமொழி சார்வு மொழியல்ல
என்றும் நடுவில் எழுந்த ஐயம்
இரண்டரசர்க்கும் இல்லா தொழிந்தது.
பாண்டியன், சோழன் படைத்தலைவர்கள்
ஈண்டினர் அரண்மனை தன்னில்—ஈண்டி
'நீலவண்ணனை எம்முன் நிறுத்துவீர்
சோறு திருடிய தொழும்பனைக் கொணர்க,
பிள்ளையைக் கொன்ற பேழையை எம்முன்
நிறுத்துக நிறுத்துக' என்று நிகழ்த்தினர்.
எதிரில் கூட்ட நடுவில் இழிவுறு
கோழைப் பார்ப்பான் கூறுகின்றான்.

அரசரே, அந்த நீலவண்ணன்
இங்கே இல்லை, தேவர் உலகம்
சென்று விட்டான். தேட முடியுமா?

## கற்புக் காப்பியம்

பொன்னி :

வருக அத்தான் இரவில்! எட்டுமணி
ஆகி விட்டதே! ஆக்கிய சோறும்
ஆறி விட்டதே.

(என்று கூறிப்

பொன்னனை வரவேற்றுள்ளே போய் அவன்
சட்டையை கழற்றி வைக்கச் சொல்லி
இட்ட நாற்காலியில் இருக்க வைத்து
விசிறியால் மெல்ல விசிறிப் பின்னர்
கைக்கு நீர் வார்த்துக் கழுவ விட்டே
இட்ட இலையில் இருத்திச் சோறு, கறி
இட்டு கணவனுக் கருத்தி மகிழ்ந்தாள்.)

பொன்னன் :

பொன்னியே. வெளியில் போக வேண்டும்
அன்பர் ஒருவர் என்வருகைக்குக்
காத்திருப்பார். கதவைத் தாழிட்டுப்
படுத்துறங்கு. பதினொரு மணிக்கெல்லாம்
வந்து விடுவேன் வருத்தம் வேண்டாம்.

பொன்னி :

தொல்லைக் கெல்லை இல்லை அத்தான்!
விடிய வெயிலும் எழுமுன் சென்றீர்
எட்டு மணி முதல் இடைவிடாமல்
தச்சு வேலையில் தளராதுழைத்தீர்
பாயிட்டுத் தலையணை இட்டேன்! படுங்கள்;
காலுக்கு வருடுவேன்! காற்றுக்கு விசுறுவேன்;
விரும்பம் முடித்து விடியும் வரைக்கும்
தூங்கலாம்! சொல்லுவதைக் கேளுங்கள்.

பொன்னன் :

தாழ் இடு! போய்ப் படு. தடுக்க வேண்டாம்.
(என்று வெளியிற் சென்று விட்டான்)

பொன்னி தாழிட்டுப் போய்ப் படுத்தாள்
துன்பம் அவனுக்குத் தோன்றுமோ என்று

நினைத்து நினைத்து நெஞ்சம் உறுகினாள்.
இரவோ பதினொரு மணியை எய்தியது.
தெருவின் திண்ணையில் இருவர் பேசுவது
மெதுவாய்ப் பொன்னி காதில் விழுந்தது.

குப்பன்

பரத்தை ஒருத்தி; அவளிடத்தில் ஒரு
கம்மாளன் ஒருவன் கும்மாளம் போட வந்தான்!
இருவரும் வீட்டினுள் பேசி இருக்கையில்
மளதளவென்று மஞ்சினி என்பவன்
வருவதைப் பரத்தை வகையில் உணர்ந்து
கம்மாளன்தனை அறைக்குள் சாத்தி
மஞ்சினிக்கு வரவேற் பளித்தாள்
மஞ்சினி மனத்தில் ஐயம் வந்தது
கதவைத் திறந்து காட்டென்று கேட்டான்.
அதற்குப் பரத்தை "அவன் என் மாமன்
கண்ணில்லாதவன் காது கேளாதவன்"
என்று கூறிச் சென்று, கதவைத்
திறந்து பொன்னனின் செங்கை பற்றி
விரைந்து வெளியே சென்றுவிட்டாள்
வருவாள் என்று மஞ்சினி இருந்தான்.
(குப்பன் இப்படிச் செப்பக்கேட்ட
கண்ணம்மா எனும் கைம்பெண் கூறுவாள்;)

கண்ணம்மா :

ஐயா இவையெல்லாம் எங்கே நடந்தன?
அந்தத் தெருப்பெயர் என்ன? அந்த
வீட்டின் எண்ணையும் விளம்ப வேண்டும்.

குப்பன் :

தெருவின் பெயரும் எனக்குத் தெரியாது.
வீட்டின் எண்ணும் விளம்ப அறியேன்.
(இதனை அறையில் இருந்து பொன்னி
கேட்டவள் திடுக்கென்று கதவைத் திறந்து
வெளியில் வந்து குப்பனை வேண்டுவாள்;—)

பொன்னி :

அந்த இடத்தை நான் அடைய வேண்டும்
காட்ட முடியுமா? காட்ட முடியுமா?

குப்பன் :

அவன் உன் கணவனா? ஆனால் வருவாய்!

கண்ணம்மா :

என்னைத் தனியே விட்டு நீர் எங்கே
போக எண்ணினீர்! புதுமை புதுமை!

நினைத்து நினைத்து நெஞ்சம் உறுகினாள்.
இரவோ பதினொரு மணியை எய்தியது.
தெருவின் திண்ணையில் இருவர் பேசுவது
மெதுவாய்ப் பொன்னி காதில் விழுந்தது.

குப்பன்

பரத்தை ஒருத்தி; அவளிடத்தில் ஒரு
கம்மாளன் ஒருவன் கும்மாளம் போட வந்தான்!
இருவரும் வீட்டினுள் பேசி இருக்கையில்
மளதளவென்று மஞ்சினி எனபவன்
வருவதைப் பரத்தை வகையில் உணர்ந்து
கம்மாளன் தனை அறைக்குள் சாத்தி
மஞ்சினிக்கு வரவேற் பளித்தாள்
மஞ்சினி மனத்தில் ஐயம் வந்தது
கதவைத் திறந்து காட்டென்று கேட்டான்.
அதற்குப் பரத்தை "அவன் என் மாமன்
கண்ணில்லாதவன் காது கேளாதவன்"
என்று கூறிச் சென்று, கதவைத்
திறந்து பொன்னனின் செங்கை பற்றி
விரைந்து வெளியே சென்றுவிட்டாள்
வருவாள் என்று மஞ்சினி இருந்தான்.
(குப்பன் இப்படிச் செப்பக்கேட்ட
கண்ணம்மா எனும் கைம்பெண் கூறுவாள்;)

கண்ணம்மா :

ஐயா இவையெல்லாம் எங்கே நடந்தன?
அந்தத் தெருப்பெயர் என்ன? அந்த
வீட்டின் எண்ணையும் விளம்ப வேண்டும்.

குப்பன் :

தெருவின் பெயரும் எனக்குத் தெரியாது.
வீட்டின் எண்ணும் விளம்ப அறியேன்.
(இதனை அறையில் இருந்து பொன்னி
கேட்டவள் திடுக்கென்று கதவைத் திறந்து
வெளியில் வந்து குப்பனை வேண்டுவாள்;—)

பொன்னி :

அந்த இடத்தை நான் அடைய வேண்டும்
காட்ட முடியுமா? காட்ட முடியுமா?

குப்பன் :

அவன் உன் கணவனா? ஆனால் வருவாய்!

கண்ணம்மா :

என்னைத் தனியே விட்டு நீர் எங்கே
போக எண்ணினீர்! புதுமை புதுமை!

குப்பன் :

புதுமை ஒன்று மில்லை! இது மெய்,
வீடு காட்டிவிட்டு மீளுவேன்.
(திண்ணையில் கண்ணம்மா இருந்தாள். இருவரும்
பரத்தை வீடு நோக்கிப் பறந்தனர்.
குப்பன் தெருவில் குந்தி ருந்தான்.
வீட்டிற் புகுந்த பொன்னி. வீட்டின்
அறையை எட்டிப் பார்த்தாள், அதிர்ந்தாள்.)

மஞ்சினி :

நீ யார்? யாரைப் பார்க்கின் றாய்நீ
எதற்கஞ்சுகின் றாய்? எல்லாம் தருவேன்.
(என்ற குரலைப் பொன்னி கேட்டாள்.)

பொன்னி :

என்றன் கணவரைத் தேடி இங்கே
வந்தேன். (என்று வருந்தி நின்றாள்)

மஞ்சினி :

நானும் மனிதன்! நாயா! பேயா!
(என்று கூறி எதிரில் வந்து
கையைப் பற்றி, மற்றொரு கையால்
தெருவின் கதவைத் திடுமெனச் சாத்தினான்.
பொன்னனும் பரத்தையும் போனார். வழியில்
வடிவு தன் வீட்டு வாயிலில் நின்று
காரிருள் பிளந்து கண்ணைச் செலுத்தினாள்.)

வடிவு :

முகவரி முற்றலும் பறந்து போனதா?
(என்றாள். பொன்னன், பரத்தை நீட்டிய
இருக்கை விலக்கி வடிவின் இல்லம்
நோக்கி நடந்தான். நுணுக்கம் அறிந்தே!
வருவான் என்ற வடிவு தன் வீட்டின்
அறையை அணுகினாள் அங்கொரு
கரும்பேய்! அழுது கொண்டிருந்தது.)

வடிவு :

பேய் பேய் ஐயோ ஐயோ பேய் பேய்,
இக்குரல் கேட்ட பொன்னன் ஓட்டம்
பிடித்தான் பேயும் பேசிற் றங்கே;—)

பேய் :

பேய் நான், பிழை செய்யும் பெண்கட்குத் தாய் நான்
காசுக் குடலை விற்கும் கயமை வேண்டாம்

உயிர் தந்தும் கற்பைக் காப்பதே உயர்வாம்
என் வலக்கையை அயலான் இடது கை
தொட்டது.
அக் கையைத் தொலைத்த தென்கை.
ஒரு கையால் என்னை ஒரு கை பார்ப்பதாய்
அம்மியின் குழவி கொண்டென் தலையில் அடித்தான்--
மண்டை உடைந்த புண்ணின் குருதிபார்!
ஆயினும் அவனால் தூக்க இயலா
அம்மி தூக்கி அவன் மேல் எறிந்தேன்;
அம்மியை தோளிற் பட்டிருந்தால் அவன்
இருப்பான்; மார்பில் பட்டதென்றால்
இறப்பான். தோட்ட வழியால் இங்கே
வந்தேன். இனி நீ வாழ்வாய் அம்மா
என்று தன் வீட்டை நோக்கி ஏவினான்.
தெருக்கதவு சாத்தி யிருந்தது. தெரிந்த
பரத்தை, தெருவில் குப்பனைப் பார்த்தாள்.

பரத்தை :

யாவர் நீவிர்? எங்கு வந்தீர்?
யாருக்காகக் காத்திருக் கின்றீர்?

குப்பன் :

உன்னிடம் வந்தவன் வேறொருத்தியை
அன்பு வேண்டி அறையில் உள்ளான்.
வேறொருத்தியை விரும்பிய எனக்கு
நீதர வேண்டும் நிலைத்த இன்பம்,
வாராய் என்னிடம்! (என்று வணங்கி
இருவர் அடுத்துள்ள இலுப்பைத் தோப்பை
அடைந்தனர் அன்பு செய்வதற்கு முன்
பேசிப் பேசிக் காலங் கடத்தினார்;
அதே நேரத்தில் பேயொன்று கண்டனர்)

பேய் :

எந்தப் பரத்தை? எந்த மனிதன்?
என்ன வேலை? இயம்ப வேண்டும்
பரத்தை பறந்தாள்! குப்பனும்
எடுத்தான் ஓட்டம்; பேய் பேய் என்றே
பொன்னன் வீட்டை அடைந்தான். அறையில்
கண்ணம் மாவைக் கட்டிலில் கண்டான்.

பொன்னன் :

நீயார்? புதிய நிலை காண்கின்றேன்
அஞ்சுதல் வேண்டாம், படுத்திரு, படுத்திரு.

கண்ணம்மா :

தானும் குப்பனும் திண்ணையை நண்ணினோம்

குப்பன் பொன்னிக்கு வீடு குறிக்கப்
போனான். நானோ இங்குப் புலம்பினேன்

பொன்னன் :

புலம்ப வேண்டாம். பெண்ணே கண்ணே
எனக்கும் இந்தப் படுக்கையில் இடங்கொடு.

கண்ணம்மா :

திருமணம் புரிந்து கொள்ள வேண்டும்
பொன்னியைத் தாய் வீடு போகச் சொல்லுக.

பொன்னன் :

அதுவும் சரிதான். அவளும் உன்போல்
அழகுடையவளும் அல்லள் அல்லள்.
என்று கூறிக் கண்ணம்மா விடம்
நெருங்கிப் படுத்தாள்! ஒரு குரல் கேட்டான்—

குரல் :

பெண் எனில் பேதை என்ற எண்ணம்
இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்
உருப்படல் என்பது சரிப்படாது,
மாதரும் கற்பை மறப்பாராயின்!
தீதெல்லாம் செழித்து வளரும் நாட்டில்!
ஒருத்தியைக் கண்டால் ஒன்பது நாய்கள்
துரத்துவது தொலைவதெந்த நாளோ?
காசுக்குக் கற்பிழக்கும் பெண்கள்
மாசுக்கே வாழ்கின்றனர் நாட்டில்!
பொன்னியின் முழக்கம் கேட்ட பொன்னன்
கண்ணம்மாவின் கழுதைப் பிடித்துக்
தோட்டத்துப் பக்கம் துரத்தி வந்தான்.
பொன்னி வீட்டிற் புகுந்தாள், தலையில்
செந்நீர் ஆறு தோளெலாம் செறிந்தது.
அவள் தலை அவிழ்ந்து மெய்யை மறைத்தது;
பெருமூச்சு தீக்கக்கும் பெருமலை!
அவளைப் பொன்னன் கண்டான். அஞ்சிடான்.

பொன்னன் :

இரவு மூன்று மணி எய்திற்று
வீட்டை விட்டு நீ எங்கே சென்றாய்?
என்று கேட்டான்: நின்று நடுங்கினாள்.
அதே நேரத்தில் கண்ணம் மாவும்
அங்கு வந்தாள் அலறலானாள்:—

கண்ணம்மா :

திருமணம் என்னைச் செய்து கொள்வதாய்ப்
புகன்றனை. என்னைப் புணர்ந்தனை இந்தப்

பரத்தை இடத்திலும் பழக எண்ணினை
என்று தோற்பாவை எழுந்தாடல் போல்
ஆடினான். அங்கே அதே நேரத்தில்
மஞ்சினி தன்னை மார்பில் சாய்த்துத்
தோகை என்பவள் தோன்றலானாள்.

தோகை :

என்றன் கணவனை இந்தப் பொன்னி
அம்மியால் தோளில் அடித்து வீழ்த்தி
இங்கே வந்து கொஞ்சு கின்றாள்.
பழிக்குப் பழி வாங்கிடுதல் வேண்டும்
என்று பொன்னியை இருகையால் தாவினாள்.
தோகையைப் பொன்னன் இருவென்று சொல்லிப்
பொன்னியை நோக்கிப் பின்னும் கேட்டான்.

பொன்னன் :

எதற்குத் தனியாய் வீட்டை விட்டோடினாய்
கற்பை விலைக்குக் காட்டவா சென்றாய்?
போகும் உயிரைப் போகாது காத்து
நாவும் குழறப் பொன்னி நவில்வாள்:

பொன்னி :

பரத்தை வீட்டில் படுதுயர் நீக்க
எண்ணினேன், வந்தேன். நீங்கள் இல்லை
மஞ்சினி என்னை மடக்கிப் பிடித்தான்
கையை முறித்தேன். குழவியால் அடித்தான்,
அம்மி தூக்கி அவன் மேல் எறிந்து
கொல்லையால் ஓடி உண்மைக் கூவிய
வடிவுக்கு வாய்மை கூறி வந்தேன்
என்று கூறினாள். பொன்னன் இலம்புவான்;

பொன்னன் :

நீயேன் வீட்டை விட்டு நீங்கினாய் அதைச்சொல்?
இதற்குள் தோகை அங்கே இருந்த
கொடுவாள் ஒன்றை எடுத்துக் கொண்டாள்;
பொன்னனும் அங்கொரு புதிய உலக்கையைக்
கையில் எடுத்துக் கண் சிவந்திட்டான்
இருவர் முயற்சியும் பயன் படுவதற்குள்
குவளை விழிகளும் கூம்பின, பொன்னி
துவளத் துவள இடை ஆடியது
அடியற்ற மரமே ஆயினாள்! வீழ்ந்தாள்.
அவளொரு பரத்தையா? அந்தக் கற்பரசி
கொலையா செய்தனள்? இந்த
நிலவுலகு பொன்னி பின்சென்று நிலைகவே.

## தமிழுள்ளம்

### மனமே அவளிடம் அகப்படாதே

தென்னகம் திருவிழாக் கண்டாற் போல
என்னகம் இவளைக் கண்டு வியந்தது!
உண்மையில் வியப்புக்குரியவள், வெண்ணிலவு
பெண்ணின் முகமென்று பேசினும் பொருந்தும்!
அதோ அக் கருங்குயில் கூவியது—ஆயிழை
இதோ தன் தோழியை 'இந்தா' என்றாள்;
குயிலினும் கோதை குரலே இனிது!
பார்க்கின்றாள் எனைப் பார்க்கின்றாள் அவள்.
மனமே மனமே, பழிவாங்கும் நிறுவனம்!
பறிப்பாள் உன்னை! பறந்துவா! பறந்துவா!
நிற்றல் வேண்டா! அவள் அழகு
பற்று முன் பறந்துவா! பணி உண்டு வேறே!

### அவள் அனுப்பிய தோழி

நேற்று நேரில் உனைக் கண்டாளாம்!
காற்றுக்காகச் சோலை வந்தாயாம்!
அவள்மேலே நீ ஆசை கொண்டாயாம்!
குவளைகண்டு, பின் கோதை விழிகண்டு,
மகிழ்ந்ததை உன்முகம் சொல்லிற்றாம்!
ஆனால், அங்கிருந்து புறப்படுங்கால் உன்
முகவரி சொல்ல வில்லையாம்
முகவரி அவளையும் கேட்கிலையாமே!

### அவள் வேண்டாம் காரணம் பிறகு...!

சோலையில் அந்தத் தோகை தன் விழியை
ஆலிலைத் தொன்னை ஆக்கி—என் அருணைப்
'பெய்' என்று கெஞ்சினாள். பெரிதும் அஃது
மெய்யே! மேலும் என் மனப் புள்ளிமான்
அவளின் அழகு வலைக்குத்தப்பிடப்
பட்ட பாடு பஞ்சு படாது!!
தென்றல் குளிரைச் செய்த போதும்
தேன்மலர் நறுமணம் செய்த போதும்
அழகும் இளமையும் அமைந்த அவ் வுருப்படி
எழுதிய காதல் எழுத்தையும் விலக்கினேன்!
காரணம் கழறுதற் கில்லை:
ஓரிரு நாள் காத்திருக்க உலகமே!

### காதல் இன்பத்தினும் இன்பம் வேறுண்டு

சின்ன நாய்க்குட்டி திண்ணையில் குதிக்கும்
அன்னையார் அதற்குப் பால் வாங்கி வைக்கக்
காசில்லாமல் கண்ணீர் விட்டனர்!
பூச, 'முகப்பொடி' கேட்டாள் பொன்னி!

அண்ணன் வாங்கித்தராததேன்? ஆதலால்
'மண்ணாய்ப்போக'! என்று வாழ்த்துவாள்!
மெத்தென்று செருப்பு விற்கும்; வாங்க
இத்தனை நாள்களாய் முடிந்தபாடில்லை.
அரசினர் ஆணை அனுப்பினர் "நீவிர்
வரும் இத் திங்கள் இரண்டாம் நாளன்று
வருமானவரி வாங்கும் துறைக்கே
பெரியதிகாரி, ஓராயிரம் பணம்
திங்கள் ஊதியம் கொள்க" என்றனர்.
எங்கள் வறுமையை எண்ணினால்—இது
பாரிவள்ளல் வாரிக் கொடுத்ததே!
எனினும் அலுவலை வேண்டேன்!
இனிதினும் இனிது மற்றொன்றுளதே!
வலிய அணைத்தாய் வேண்டாம் அதோ போர் முரசு!

வலிய அணைத்தாய் மார்பில் இறுக நீ
மலிவு விலைக்கு வந்த மாணிக்கம்!
அடித்து வாய் திறந்தூட்டிய அமிழ்தே!
படித்து வரப்பண்ணிய பழத்தமிழ்ப் பாட்டே!
ஆயினும் வேண்டாம் எனைவிடு! செந்தமிழ்த்
தாயினும் நான் தொழத்தக்க தொன்றுண்டோ?
கேள்! கேள்! போர்முரசு! தூக்கிய
வாள் இது வெல்க! வண்டமிழ் வாழ்கவே!

## பச்சைக்கிளி

காட்டுக் கதிகாரி கண்ணையன். காலையிலே
வீட்டுக்குப் போக மிதிவண்டி ஏறினான்.
ஆலஞ்சாலைதாண்டி அல்லிக் குளம் தாண்டி
வேலங்காடொன்றும் விலக்கிச் செலும்போது
செந்தாழை வேலிக்குத் தென்னண்டை ஓர்புலியை
'அந்தோ!' என்றான் கண்டே! அங்கோர் இளவஞ்சி
பாவாடை கட்டிப் பலாவின்கீழ் மென்பட்டுப்
பூவாடை போர்த்துப், புனலொழுகு கண்மூடி
நீளக் கிடந்தாள்! நிலாமுகத்தைத் தின்னாமல்
வேளைப் புதர் ஓரம் வெள்ளாட்டைத் தின்னுதற்குப்
போன புலிகண்ட கண்ணையன் "போபோ" என்
மானை விடுத்தாயே!" என்று மனந்தேறி
நின்றான்! மிதிவண்டி என் செய்வேன்? நீண்டபனை
ஒன்றிலே சார்த்தி உணர்ச்சிப் பெருக்கால்
வழியை மறிக்கும் மலர் ஓடை தாண்ட
விழியூன்றி நீரில் விரல்பட்ட நேரத்தில்
"நில்லப்பா" என்று சொல்கேட்டான், நிலைமாறிச்
சொல்வந்த திக்கைச் சுவைத்தான் இருவிழியால்.
நீண்ட சடைமுடியை, நெற்றித் திருநீற்றை
ஆண்டியைக் கண்டான். அடஇழவே என்றெண்ணி

ஓடையின் அப்புறத்தில் ஓவியத்தைத் தான் காட்டிக்
காடு விழுங்குமுன்னே காப்பாற்ற வேண்டுமென்றான்.

ஆண்டி சிரித்துரைப்பான்; அப்பனே! காப்பவன்
ஈண்டு நீதானா?—இது கேட்ட கண்ணையன்.
உம்மால் முடிந்தால் ஒரு தொல்லை இல்லை என்றான்!
''என்னால் முடிவதென்றால் என்னப்பன் ஏன்? என்
றுரைத்தான் துறவி! உமக்கப்பன் இங்கே
வரத்தகுந்த போது வரட்டும் அதற்குள்ளே
ஓநாய் கடித்துண்ணும். ஒண்டொடிக்கு மீட்சிதர
ஏனோ தயக்கம்?'' எனக்கேட்டான் கண்ணையன்!

''வேண்டாம் குழந்தாய் கேள்! மெய்யான பெண்ணல்ல,
தூண்டிலே! நீயோர் துடுக்கு மீன்!! அண்டாதே,
பற்றுள்ள கண்ணுக்குப் பச்சைக் கிளி அவள்!
பற்றற்றுக் காண்பாய் புரளும் மலைப்பாம்பை!''
என்றான் துறவி! அதே நேரம் ஏந்திழையும்
நன்று விழிமலர்ந்தாள்! நாற்புறமும் நோக்கினாள்!
அண்டிக்கை கும்பிட்டாள்! ஆளனைக்கை ஏந்தினாள்.
கண்ணையன் விண்ணிற் பறந்தானா! காரோடைத்
தெண்ணீரை நீந்தித்தான் சென்றானோ, யார் கண்டார்?
பெண்ணருகில் நின்று பிறைநுதலே என் னென்றான்.

''அன்னை இல்லை! தந்தை இல்லை! அத்தையிடம் நான்
வளர்ந்தேன்
என்னை என் அத்தை மகன், 'ஏற்றுக்கொள்' என்றான்
ஒழுக்கம் இலா இடத்தை உள்ளம் தொடுமா?
வழிக்கு வரமாட்டேன் என்பதுணர்ந்தான்,
கசக்கிப் பிழிந்துண்ணக் காத்திருந்தான் காட்டின்
பசிக்கிரை ஆவதுவும் பாக்கியமென்றிங்குற்றேன்
என்றாள்; அதே நேரம் நீந்தி எதிர்வந்து
நின்றான் துறவி நிலை ஆய்ந்தாள் நேரிழையாள்.
''என்ன குறை உனக்குப் பெண்ணே?'' எனக்கேட்டான்;
பின்னையும் ஆண்டியவன் பேசத் தொடங்குமுன்னே
கண்ணையன் தோள் புறத்தில் கான மயில்போய்
—மறைந்தாள்

கத்தி யெடுத்துக் கடிமுனை நேர் நிறுத்தி
''ஒத்துக்கொள் என்னை! மறுத்தால் ஒழிந்துபோ!
என்று துறவி சொல்ல—''என்ன இது என்ன இது
நின்ற துறவி உன் நேர் மாமனா?'' என்று
கண்ணையன் கேட்டான். அக்கன்னல் பதைத்துரைத்தாள்;
பெண்ணாசை தீர்ந்த பெருமான் இவன் அல்லன்
அத்தை மகன் தான் அறங்காணாத் தீயன், அவன்
கத்தியால் குத்தட்டும்; கண்டதுண்ட மாக்கட்டும்!
அண்டிருங்கள்! ஆனால்இக் கைக்காரன் என் உடலைக்

கொண்டு போகாமல் குழி பறித்து மூடுங்கள்!''<br>
என்றாள்; எதிர் வந்தாள்; ''எடுத்துக்கொள் கத்தி''<br>
—என்றாள்!<br>
நின்றாள், இடியைச் சிரிப்பாக்கி நேர் இறைத்தாள்!<br>
கண்ணையன், அத் தீயோரின் கத்தியைக் கைப்பற்றிப்<br>
''பெண்மணியைக் கொல்லுமுன் பேதாய்! எனைக்கொல்க<br>
என்றான், துறவிதான் ஏந்தியக் கத்தியைத்<br>
தன்மார்பிற் பாய்ச்சிக் குருதிதனில் மிதந்தான்!<br>
கண்ணொப்பான் கண்ணும் கருத்தும் புரிந்ததென்ன?<br>
விண்ணும் விரிபுனலும் வேடிக்கை பார்த்தனவாம்!<br>
செத்தான் மேல் கண்ணீர் செலுத்தி உயிர்காத்த<br>
அத்தான் மேல் வைத்தாள் மெய் யன்பு!

□ □ □